# இலக்கு

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 240 சனி, ஜூன் 24, 2023 16 பக்கங்கள்




## ஜெனிவா அரங்கு; ஆட்சிகள் மாறினாலும் மாறாத காட்சிகள்

அகிலன்



## ஏற்கப்படாத ஏதிலி ஏக்கம்

பேராசிரியர். முனைவர் ஆ. குழந்தை





## மீண்டும் செல்வந்தர்களை மூழ்கடித்த ரைற்றானிக் கப்பல்


ஆர்த்தீகன்



© 2023 இலக்கு இணையம்

# மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவு

## யாழில் கண்காட்சி



மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் கண்காட்சி நேற்று (23) ஆரம்பமானது.

மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் மலையக மக்களின் கலை வெளிப்பாடுகளாக "புறக்கணிக்கப்பட்ட மலைகள்" என்ற தலைப்பில் கிசோகுமாரின் புகைப்பட கண்காட்சியும், "தேயிலை சாயம்", எனும் தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் புகைப்படங்களின் கண்காட்சியும் இதில் உள்ளடக்கியுள்ளது.

குறித்த கண்காட்சி நாளை (25) வரை, யாழ்ப்பாணத்தில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை காட்சிப்படுத்தப்படவுள்ளது.

# அமெரிக்காவில் இந்தியப் பிரதமருக்கு மிகப்பெரும் வரவேற்பு



அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பிரதமருக்கு அமெரிக்க அரசு மிகப்பெரும் வரவேற்பை வழங்கியுள்ளது. வியாழக்கிழமை (22) காங்கிரஸ் சபையில் உரையாற்றும் அவர் அமெரிக்க அதிபரின் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளவுள்ளார்.

தற்போதைய அமெரிக்க அதிபரின் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளும் முதலாவது மூன்றாம் தரப்பு நாட்டின் தலைவர் மோடியாவார். சீனாவின் பொருளாதார மற்றும் படைத்துறை வளாச்சி, உக்ரைன் மீதான ரஸ்யாவின் போர் என்பன அமெரிக்காவை இந்தியாவின் பக்கம் திருப்பியுள்ளது.

குஜராத்தில் இடம்பெற்ற கலவரத்தில் முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டதில் மோடியின் பங்கு இருப்பதாக தெரிவித்து மோடிக்கு அமெரிக்காவுக்கான நுளைவு அனுமதியை வழங்க மறுத்த அமெரிக்கா தற்போது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# எலும்புக் கூடுகள் நிறைந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

## பிரிட்டோ பெர்ணாண்டோ



மனித எலும்புக்கூடுகள் நிறைந்த மண்ணில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என மனித உரிமை செயற்பாட்டாளர் பிரிட்டோ பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பாரிய மனித புதைகுழிகள் குறித்த நிகழ்வில் உரையாற்றுகையில், நாங்கள் எலும்புக்கூடுகள் நிறைந்த மண்ணில் வாழ்கின்றோம். உலகிலேயே அதிகளவானவர்கள் காணாமல்போன நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தில் இருப்பதாக ஐ.நா தெரிவிக்கின்றது.

நாங்கள் உயிரிழந்வர்களை கௌரவித்து அவர்களை மரியாதையாக வழிஅனுப்பிவைக்கும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மீண்டும் ஒரு அகதிகள் படகு விபத்து - 35 பேர் பலி

கனேரி தீவுகளுக்கு அண்மையாக 60 இற்கு மேற்பட்ட அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடந்த புதன்கிழமை (21) கடலில் மூழ்கியதால் 35 பேருக்கு மேல் உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.



சம்பவ இடத்திற்கு விரைந்த ஸ்பெயின் Walking Borders என்ற அரச சார்பற்ற அமைப்பின் மீட்புக் குழுவினரும் கரையோர காவல் படையினரும் 24 பேரை காப்பாற்றியுள்ளதுடன் இரு சடலங்களையும் மீட்டுள்ளனர். 36 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அவர்களை தேடும் பணிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 14 ஆம் நாள் கிறீஸ் கடல் பகுதியில் இடம்பெற்ற அகதிகள் படகு விபத்தில் அதில் பயணம் செய்த 750 அகதிகளில் 500 பேர் காணாமல்போயிருந்தனர். இந்த நிலையில் தற்போது மேலும் ஒரு விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனிடையே, கனேரி தீவுகளுக்கு அண்மையாக மற்றுமொரு படகில் இருந்து 51 அகதிகளை தாம் மீட்டுள்ளதாக ஸ்பெயினின் கரையோர காவல் படையினர் தெரிவித்துள்ளனர். இதுவரையில் கனேரி தீவுகளுக்கு 5,914 அகதிகள் வந்துள்ளனர். இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 31 விகிதம் குறைவாகும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு 29,895 அகதிகள் வந்ததாகவும் அவர்களில் 643 பேர் கடலில் மரணமடைந்ததாகவும், 2022 ஆம் ஆண்டு 41,979 அகதிகள் வந்ததாகவும் அவர்களில் 418 பேர் கடலில் மரணமடைந்ததாகவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

# பைடனின் கருத்தால் சர்ச்சை - சீனாவை சமாதானப்படுத்தும் அமெரிக்கா



சீன அதிபர் ஜி ஜின்பிங்கை ஒரு சர்வாதிகாரி என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்த கருத்தால் எழுந்த முறுகல் நிலையை தணிக்கும் முயற்சிகளில் அமெரிக்க அதிகாரிகள் ஈடுபட்டுவருவதாக என்.பி.சி செய்தி நிறுவனம் கடந்த புதன்கிழமை (21) தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (20) கொடைவழங்கும் செல்வந்தர்களுடன் பேசும் போது சீனாவின் உளவு பலூன் அமெரிக்காவிற்குள் நுளைந்தது சீனா அதிபருக்கு தெரியாதாம். பலூன் எங்குள்ளது என தெரியாத சர்வாதிகாரி அவர் என பைடன் தெரிவித்திருந்தார்.

பைடனின் இந்த கருத்து மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதுடன் அது ஒரு அரசியல் சீண்டல் என சீனாவின் வெளிவிவகார அமைச்சகம் கடுமையான கண்டனத்தை உடன்டியாகவே தெரிவித்திருந்தது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# எதிர்ப்புக்களையும் மீறி கதிரியக்க நீரை கடலில் விட யப்பான் திட்டம்



யப்பானின் பக்குசீமா பகுதியில் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலையால் அணுமின்னிலையத்தில் ஏற்பட்ட விபத்தின்போது கதிர் வீச்சுக்கள் மின்னிலையத்தில் பயன்படுத்தப்பட்ட நீரில் கலந்திருந்தன. அதனை பாதுகாப்பாக சேமித்து வைத்த யப்பான் தற்போது கடலில் கலப்பதற்கு திட்டமிட்டுள்ளது.


ஏறத்தாள ஒரு மில்லியன் தொன் எடைகொண்ட கதிர்வீச்சுக்களை கொண்ட நீர் பசுபிக் கடலில் கலக்கப்பட்டால் கடல் வாழ் உயிரினங்களுக்கும், மனிதர்களுக்கும், சூழலுக்கும் பாதிப்புக்கள் ஏற்படும் என பல அமைப்புக்கள் எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றன.

2021 ஆம் ஆண்டு இந்த முடிவை யப்பான் எடுத்தபோதும் எதிர்ப்புக்கள் காரணமாக யப்பான் அதனை பிற்போட்டிருந்தது. இது யப்பான் அரசின் முடிவு அதில் அனைத்துலக அணுசக்தி அமைப்பு தலையிட முடியாது என தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலியாவின் அடிலைட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரொனி கூக்கர்.

யப்பானின் இந்த முடிவை அங்கீகரித்து கண்டும் காணாமலும் ஜீ-7 நாடுகள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இந்தியாவின் சட்டத்தை நாம் மதிக்க வேண்டும் – ருவிட்டரின் தலைவர்



ருவிட்டர்சமூகவலைத்தளத்தில் பதிவிடப்படும் பதிவுகளை அகற்றப்போவதாகவும், சில சமயங்களில் அதனை தடைசெய்யப்போவதாகவும் இந்திய அரசு தெரிவித்த அழுத்தங்களை தாம் ஏற்றுக்கொள்ளப்போவதாக ருவிட்டர் நிறுவனத்தின் தலைவர் இலோன் முஸ்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியை நியூயோர்க் நகரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (20) சந்தித்த பின்னரே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். நாம் எமது வியாபாரத்தை இழக்க விரும்பவில்லை, எமக்கு இந்தியாவின் சட்டங்களை மதிப்பதை தவிர வேறு வழியில்லை எனவே நாம்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## மனித புதைகுழிகள் தொடர்பான விசாரணைக்கு கோட்டாபய இடையூறு

### புதிய அறிக்கையில் தகவல்



இலங்கை இராணுவத்தின் அதிகாரியாக இருந்த போது, மனித புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளைத் தடுக்கும் வகையில் ஆவணங்களை அழிக்குமாறு காவல்துறையினருக்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனித புதைகுழிகளைத் தோண்டியெடுப்பதில் கோட்டாபய ராஜபக்சவின் பங்கு அரசியல் தலையீட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு எனச் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் (மற்றும் காணாமல் போனவர்களுக்கான அமைப்பு ஜனநாயக ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆகியன இணைந்து வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ச இராணுவ அதிகாரியாக இருந்த போது, 1989ஆம் ஆண்டுகளில் மார்க்சிச கிளர்ச்சி உச்சக் கட்டத்தில் இருந்ததுடன், அந்தக் காலப் பகுதிக்குரியது எனக் கூறப்படும் மனித புதைகுழிகள் கண்டறியப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இக் கூட்டறிக்கையானது இலங்கையில் நடந்த மோதலின் பல்வேறு காலப்பகுதியைச் சேர்ந்த பாரிய மனிதப் புதைகுழிகளை இலங்கை எவ்வாறு கையாண்டது என்பதை ஆய்வு செய்கின்றது.

பல்லாயிரக்கணக்கான சடலங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள புதைகுழிகளில் இன்னமும் புதையுண்டுதான் கிடக்கின்றன. கடந்த மூன்று தசாப்தங்களில், 20 மனித புதைகுழிகள் பகுதியாக அகழ்வு செய்யப்பட்டுள்ளன. இற்றைவரை, எந்தக் குடும்பத்திற்கும் தங்களது அன்புக்குரியவர்களது மனித எச்சங்கள் கிடைக்கவில்லை.

இலங்கையில் அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்களில் ஒன்று கூட பாரிய மனித புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளது. குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்குப் போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போதும் உயிருடன் உள்ள சாட்சிகளை கண்டறிவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை, மரணத்திற்கு முந்தைய எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை, யாரேனும் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருந்த ஒரு சில அரிதான வழக்குகளிலும், அக்குற்றவாளிகளுக்கு பின்னர் மன்னிப்பு வழங்கப்பட்டது. போதுமான சட்டக்கட்டமைப்பு இல்லாமை, ஒத்திசைவான கொள்கையின்மை மற்றும் போதுமான வளங்கள் இன்மை என்பன சேர்ந்த அரசியல் ஆர்வமின்மையின் விளைவே இதுவாகும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு தீர்க்கப்படாத துன்பியல் சம்பவமாகும். இழப்புக்களைச் சந்தித்தவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களைக் கண்டு பிடிக்காமலேயே வாழ்ந்து - சாகவேண்டிய நிர்ப்பந்ததிற்கு ஆளாக்கப் பட்டுள்ளனர்.

கட்டுமானப் பணிகள் நடந்த போது தற்செயலாக புதைகுழிகள் வெட்டப்பட்டதையடுத்து, அல்லது- விதிவிலக்காக 1999இல், யாழ் மாவட்டத்தில் உள்ள செம்மணி போன்ற, குதைகுழிகள் பற்றிய

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## இலங்கைத் தீவில் இறைமைகள் நல்லிணக்கத்தின் மூலமே இன நல்லிணக்கம் நடைமுறைச்சாத்தியமாகும்

சிறிலங்காவில் வெளியகப் பொறிமுறைகள் பயன்படுத்தப்படுவதற்கான சூழல் பலமடைந்து வருவதை 53வது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் அதன் மனித உரிமைகள் துணை ஆணையாளர் நடா அல் நசிவ் அவர்களின் சிறிலங்காவில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் என்பனவற்றின் முன்னேற்றங்கள் குறித்த கடந்த வார வாய்மொழி அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

"எது எப்படியிருப்பினும் பொறுப்புக்கூறல் பற்றாக்குறை சிறிலங்காவில் தொடருமானால் அனைத்துலக சமூகம் கண்டிப்பாக கட்டாய வழிகளில் அனைத்துலகச் சட்டமுறைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளியக நீதிவிசாரணை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குற்றமிழைத்தவர்களை கண்டுபிடித்து தண்டிக்கும். அத்துடன் குற்றமிழைத்தவர்கள் என நம்பகத்தன்மையாக அறியப்படுபவர்களுக்கு எதிராக மூன்றாவது தரப்பினரான அரசுக்கள் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த எடுக்கும் நீதியான செயற்பாடான தடைவிதித்தல்களையும் அனைத்துலக சமூகம் ஆதரிக்கும்" என ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் துணை ஆணையாளர் நடா அல் நசிவ் அவர்கள் தனது வாய்மொழி அறிக்கையில் எச்சரித்துள்ளமை அனைத்துலக மட்டத்தில் சிறிலங்கா மீதான வெளியகப் பொறிமுறை விசாரணை வேகம் பெற்று வருவதை வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்புச் சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான உரையில் ஐக்கியநாடுகள் சபையில் நடை பெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் 53வது கூட்டத்தொடரில் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை மீது நம்பிக்கை கொள்ள முடியாத தன்மை காணப்படுவதாக ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் துணை ஆணையாளர் உடைய அறிக்கை சுட்டிக்காட்டியிருப்பதை எடுத்துரைத்து "பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியதென உலகநாடுகளும் இன்று ஏற்றுக் கொண்டுள்ளன. உள்ளக விசாரணையில் ஒரு பொழுதும் நீதி கிடைக்காது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்" எனப் பேசியுள்ளமை வெளியக விசாரணைகளை தாமதியாது உடன் அனைத்துலக சமூகம் நடைமுறைப்படுத்தத் தாயகத்திலும் உலகிலும் ஈழத்தமிழர்கள் பொதுவெளியில் கூட்டொருங்கு இயக்கத் தலைமையினை உடன் உருவாக்கிச் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை மீளவும் உணர்த்தியுள்ளது. ஏனெனில் எந்தவொரு ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்கக்கூடிய அனைத்துலகச் செயன்முறைகளையும் வல்லாண்மைகளதும் பிராந்திய மேலாண்மைகளதும் சிறிலங்காவுக்கான தற்சார்பு அரசியல் செயற்பாடுகள் தடுத்துவிடுவது வரலாறாக உள்ளது. எனவே ஈழத் தமிழர்களின் கூட்டொருங்குத் தலைமைத்துவ அமைப்பு ஒன்றாலேயே இந்தப் பிரச்சினையைச் சூழலுக்கு ஏற்ப எதிர்கொள்ள முடியும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

அமெரிக்க இந்தியக் கூட்டொருங்குத் தலைமைத்துவச் செயற்பாட்டின் மூலம் சிறிலங்காவினுடைய இறைமையும் ஆட்புல ஒருமைப்பட்டையும் பாதுகாத்தல் மூலம் சீன இந்துமாக்கடல் மேலாதிக்கத்தை மட்டுப்படுத்தல் என்கின்ற இந்தோ அமெரிக்கச் செயற்திட்டம் வேகமாக இருநாடுகளின் ஒருங்கிணைவுடன் நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கியுள்ளதை புதுடில்லியிலும் வாசிங்டனிலும் தங்கள் உரையாடலுக்கான ஈழத்தமிழர் பிரதிநிதிகளாகச் சிலரை வடிவமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவது உணர்த்துகிறது. இருநாடுகளதும் வெளிவிவகாரச் செயற்பாடுகள் இந்நாடுகளின் புலனாய்வுத் துறைகளாலும் வெளிநாட்டுக் கொள்கை வகுப்புக் குழுவினராலும் நாட்டின் கட்சி அரசியலுக்கு அப்பால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதும் உலகறிந்த உண்மை.

அந்த வகையில் உலகத்தமிழர் பேரவையினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பின் பெயரில் அதன் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச்செயலாளர் பெத்வான், தேசிய பாதுகாப்புச் சபையின் இலங்கை, நேபாளம், மற்றம் மாலைதீவுக்கான பணிப்பாளர், செனட்டின் அயலுறவுத்துறைக் குழு அலுவலகத்தின் மூத்த பணிநிலைப் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனர். உலகத்தமிழர் பேரவையினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாட்டு நிகழ்ச்சிநிரலில் இருந்து இலங்கை குறித்த அக்கறை நீக்கப்படாதவாறு அமெரிக்கா பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததாகவும் அதற்கு உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலர் அம்பெத்வான் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் ஒதுக்கப்படுவதை அமெரிக்கா அனுமதிக்காது என உறுதிமொழியளித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கூடவே அவர் இலங்கை மேலான கண்காணிப்புப் பொறிமுறைகள் ஐ.நா.வில் தொடரும் எனவும் உத்தரவாதம் அளித்துள்ளதாகவும் அச்செய்திகள் கூறியுள்ளன. சிறிலங்காவின் பொருளாதார மீட்சிக்கு அங்கு அரசியல் நிலைமை சீராக வேண்டுமெனவும் இதற்கு ஈழத்தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென உலகத் தமிழர் பேரவை கோரிக்கை விடுத்த பொழுது "இலங்கையில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்குமான எந்தவொரு முயற்சிக்கும் அமெரிக்கா தனது முழுமையான ஆதரவை வழங்கும்" என்று உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலர் அம்பெத்வான் மேலும் உறுதியளித்துள்ளார்.

இவ்விடத்தில் இன நல்லிணக்கம் என்பது மொழி மத இனசமத்துவத்தால் இலங்கைத் தீவில் உருவாக்கப்பட முடியாத அரசியல் பண்பாடு நிலவுகிறது என்பதை வல்லாண்மைகளுக்கும் பிராந்திய மேலாண்மைகளுக்கும் எடுத்து விளக்கி வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக, இலங்கைத்தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமுள்ள இறைமையுடன் ஈழத்தமிழ் மக்கள் உள்ளனர். இதன் அடிப்படையில் அவர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையை வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் ஏற்பதன் வழியாக தமிழர் சிங்களவர் இறைமைகளுக்கு இடை நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதன் வழியாகவே நல்லிணக்க அரசியல் நடைமுறைச் சாத்தியமாகும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார விதந்துரைப்பாக உள்ளது.

இறுதியாக இந்தியாவால் ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தான் அணுகும் முகவர்களாக உருவாக்கப்பட்டு வருபவர்களுக்கும், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை அவர்களின் பிரித்தானியா வாழ் இந்திய இலங்கைத் தமிழர்களைச் சந்திக்க இலண்டனுக்கு மேற்கொண்டுள்ள ஆறுநாள் அரசியற் செயற்திட்டத்தில் பங்கெடுக்கும் ஈழத்தமிழர் அமைப்புக்களைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு முக்கிய பொறுப்பு உண்டு என்பதை இலக்கு நினைவுறுத்த விரும்புகிறது. 36 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 13வது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணசபைகளுக்கான சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் வழங்கப்படக்கூடிய வரிவருமானப் பகிர்வுகளின் சிறுகுற்றங்களைக் கையாள்வதற்கான மாகாணசபைப் பொலிஸ் கட்டமைப்பு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் தலைமை நோக்கான சிறிலங்காவின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க மட்டுமே உதவும். ஈழத்தமிழர்களின் வெளியகத்தன்னாட்சி உரிமையை இந்தியா எப்பொழுது ஏற்கின்றதோ அப்பபொழுதுதான் இந்தியாவால் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கான நீதியான தீர்வை முன்னெடுக்க முடியும். இதனை இந்தியாவுக்கு தெளிவுபடுத்துவதே உங்கள் பொறுப்பு என்பது இலக்கின் எண்ணம்.

**ஆசிரியர்**

# ஜெனிவா அரங்கு; ஆட்சிகள் மாறினாலும் மாறாத காட்சிகள்



ஜெனிவா கூட்டத் தொடரை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு எதனையாவது செய்யப்போகின்றோமா? அல்லது தொடர்ந்தும் வருடத்துக்கு மூன்று தடவை சந்திப்பதற்கான ஒரு களமாக இதனைப் பயன்படுத்தப்போகின்றோமா? இது தொடர்பில் ஆழமாகச் சிந்தித்து தெளிவான முடிவொன்றை எடுக்க வேண்டிய கட்டத்தில் தமிழ் மக்கள் இருப்பதாகவே தெரிகின்றது. "ஜெனீவாவுக்கு எவ்வாறு சுழித்தோடுவது" என்ற உபாயத்தை இலங்கை அரசாங்கம் நன்றாகக் கற்றுக் கொண்டுவிட்டது.

ஜெனிவாவுக்குள் இருந்துகொண்டு எதனையும் சாதிக்க முடியாது என்பது மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்து. இதனால், தமிழ் மக்கள் முற்றாக நம்பிக்கையிழந்துவிட்டார்கள். மனித உரிமைகள் பேரவைக்கு நிறைய வரையறைகள் உள்ளன. இதனை இலங்கை அரசாங்கம் நன்றாகப் படித்துக்கொண்டிருப்பதால், அதற்கேற்றவாறு காய்களை நகர்த்துகின்றது. தமிழர்தரப்பைப் பொறுத்தவரையில் வழமையான கோஷங்களுடன் ஜெனிவாவுக்கு வருகின்றார்களே தவிர, அவர்களிடம் புதிய உபாயங்கள் எதுவும் இல்லை!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் இவை தொடர்பாக ஆராயவேண்டியுள்ளது. இலங்கை தொடர்பாகவும் இங்கு "வழமைபோல" பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஜெனிவா கூட்டத் தொடர் என்பது வெறுமனே ஒரு சம்பிரதாயமான சந்திப்பாகிவிட்டது. தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்ற போதிலும், அதனையிட்டு இலங்கை அதனை அலட்சியப்படுத்தியே வருகின்றது. பொறுப்புக்கூறலில் தனக்குள்ள பற்றுறுதியை வெளிப்படுத்திக்கொண்டு அதனை செய்யாமலிருப்பதும், அதற்கான காரணங்களை பின்னர் அடுக்குவதும்தான் இலங்கையின் உபாயம். இது ஒரு சுழற்சியாக இவ்வருடமும் நடைபெறுகின்றது.

"இலங்கை பொறுப்புக் கூறலை உறுதிப் படுத்துவதற்குத் தாமதிக்கும் பட்சத்தில், சர்வதேச விசாரணைப் பொறிமுறை உள்ளிட்ட வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியேற்படும். மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்போருக்கு எதிராகத் தடைகளை விதிக்க வேண்டியேற்படும்" என்று மனித உரிமைகள் பேரவையின் பதில் உயர் ஸ்தானிகர் நாடா அல் நஷீப் புதன்கிழமை உயர் ஸ்தானிகரின் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். ஜெனிவாகூட்டத்தொடர்களின் போது உயர்ஸ்தானிகர் வழமையாகத் தெரிவிக்கும் வசனங்கள்தான் இவை.

மனித உரிமைகள் ஆணையாளரை விட, "கோ குறுப்" எனக் குறிப்பிடப்படும் இணை அனுசரணை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் என்பனவும் ஜெனீவாவில் வைத்து இலங்கையின் "பொறுப்புறக்கூறாத" அணுகுமுறையை கடுமையாகக் கண்டித்திருந்தன. பொறுப்புக் கூறல் என்பதைவிடவும், பயங்கரவாத தடைச்சட்டதை நீக்குவதாகவும் தொடர்ச்சியாக ஜெனிவாவில் கொடுத்துவரும் வாக்குறுதியும் இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை. அதனையும் ஐரோப்பிய ஒன்றியம் இம்முறை மீண்டும் சுட்டிக்காட்டியிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மோசமான பல அம்சங்களைக் கொண்டிருப்பதாகவும், அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த நிலையில்தான் அதனை நீக்க வேண்டும் என பல வருடகாலமாக ஜெனிவாவிலும், பல்வேறு மனித உரிமை அரங்குகளிலும் வலியுறுத்தப்பட்டுவருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் அதனை அவர்கள் நிராகரிப்பதில்லை. அதனை ஏற்றுக்கொள்வார்கள். ஏற்றுக்கொள்வதுடன் மட்டும் நின்றுவிடாது, அதனை நீக்குதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும், அதற்குப் பதிலாக மற்றொரு சட்டத்தைக் கொண்டுவரப்போவதாகவும் சொல்லியிருக்கின்றார்கள். சர்வதேசத்தின் "கரிசனைகளை" சமாளிப்பதற்கு கடந்த பல வருடங்களாக அரசாங்கம் கையாளும் இராஜதந்திரம் இது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்" என்ற பெயரில் சட்டம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. இதற்கான வரைபு சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னரே தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், முன்னைய தைவிட "பின்னையது" மிக மோசமானது எனத் தெரிவிக்கப்படுவதால், அதனை முன்னகர்த்துவதற்கு அரசாங்கம் தயங்குகின்றது. ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கும் - ஜனநாயக ரீதியாக உருவாகக்கூடிய எதிர்ப்புக்களைக் கட்டுப் படுத்துவதற்கும் இவ்வாறான சட்டம் ஒன்று அரசாங்கத்துக்கு அவசியமானதாக இருக்கின்றது. அதனால்தான் ஒவ்வொரு ஜெனீவா அமர்விலும் மேற்கு நாடுகளைச் சமாளிப்பதற்காக சில உபாயங்களைக் அரசாங்கம் கையாள்கின்றது.

வழமைபோலவேஇம்முறையும்இலங்கையின் பதிலும் அமைந்திருந்தது. "நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நாட்டின் அரசியலமைப்புக்கு இசைவாக அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது" என ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பதிலளிக்கப்பட்டது. ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணாதிலக்க இதனைத் தெரிவித்திருந்தார்.

ஜெனிவாவைச் சமாளிப்பதற்குத் தமிழரசுக் கட்சியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நடத்திய பேச்சுக்களை ஹிமாலி அருணாதிலக்க எந்தளவுக்கு நுட்பமாகப் பயன்படுத்தினார் என்பதையும் அவரது உரையின் போது அவதானிக்க முடிந்தது. "தமிழ் அரசியல் தரப்பினருடன் ஜனாதிபதி அண்மையில் நடத்திய பேச்சுக்களின் போது, காணி விடுவிப்பு, காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, அரசியல் கைதிகள் விடுதலை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது" என்று அவர் சொன்னாரே தவிர, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தை முடிவடைந்த பின்னர் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் கடும் விரக்தியடைந்த நிலையில் எவ்வாறான கருத்தை வெளியிட்டிருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், ஜெனிவாவில் வரக்கூடிய அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு "பேச்சுவார்த்தை நடத்தினோம்" என்ற ஒன்றே இலங்கை அரசாங்கத்துக்குப் போதுமானதாக இருந்திருக்கின்றது. மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக இப்போதல்ல கடந்த 14 வருடங்களாகவே பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், ஜெனிவாவில் தடை ஒன்றைத் தாண்டுவதற்கு தமிழரசுக் கட்சித் தலைமையுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுக்களை இலகுவாக அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது. இந்தப் பேச்சுக்களின் பலன் எதுவுமே இல்லை என்பது சர்வதேச சமூகத்துக்குத் தெரியாமலா இருக்கின்றது!?

**அகிலன்**

ஜெனிவா என்றவுடன் தமிழ் மக்களுக்கு ஆரம்பத்தில் இருந்த உற்சாகமும் நம்பிக்கையும் இப்போது காணாமல் போய்விட்டமைக்கு இவை அனைத்தும் காரணம். இதிலிருக்கக்கூடிய யதார்த்தத்தையும் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. ஜெனிவாவுக்கு காவடி எடுக்கும் தமிழ்த் தலைமைகளும் புலம்பெயர்ந்த அமைப்புக்களின் தலைமைகளும் அதன் மூலமாக தமது பரப்புரைகளைத்தான் முன்னெடுத்தார்கள். இலங்கையில் இருந்து ஜெனிவா செல்லும் தமிழ்த் தலைமைகள் பக்க நிகழ்வுகளில் கலந்துகொண்டு, தாயகத்தில் இருக்கும் தமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தி, அடுத்த தேர்தலில் தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்கான உரைகளை நிகழ்த்தினார்களேதவிர, மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு சில வரையறைகள் இருக்கின்றது. அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நாட்டின் அனுமதி தேவை. இலங்கை தொடர்பாக மட்டுமன்றி, வேறு நாடுகள் தொடர்பாகவும் பல தீர்மானங்கள் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்தத் தீர்மானங்கள் குறிப்பிட்ட நாடுகளின் ஒத்துழைப்பு இன்மையால் நிறைவேற்றப்படவில்லை. தடைகள் கொண்டுவரப்பட வேண்டுமானால், ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அது கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்கான வாய்ப்பு இல்லை. அவ்வாறு கொண்டு செல்லப்பட்டாலும் சீனா, ரஷ்யா போன்ற "வீற்றோ" அதிகாரம் உள்ள நாடுகள் இலங்கையைப் பாதுகாக்கும். இலங்கைக்கும் இது நன்றாகத் தெரியும். அதனால்தான் ஒவ்வொரு வருடமும் ஒரே விடயத்தை அவர்கள் மாற்றிமாற்றி சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்.

தற்போதுள்ள நிலையில் இரண்டு விடயங்களில் ஜெனிவா எமக்கு உதவுவதாக இருக்கும். ஒன்று - இந்தப் பிரச்சினையை உயிர்த் துடிப்புடன் சர்வதேச அரங்கில் வைத்திருப்பதற்கு ஜெனிவா தேவையாகவுள்ளது. அதாவது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# டில்லிக்கும் ரணில் செல்லும் நிலையில் மோடிக்கு கடிதம் அனுப்புவது எதற்காக?

**ஐந்து கட்சிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ள ஜனநாய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்றது. இதன்போது கூட்டமைப்பின் கட்டமைப்பு, அரசியல் தீர்வு முயற்சிகள், இந்திய அரசுடன் பேசுவது என்பவை தொடர்பில் முக்கியமான சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இவை தொடா்பாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் லண்டன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலிக்கு வழங்கிய நேர்காணலின் முக்கியமான பகுதிகள் "இலக்கு" வாசகர்களுக்காக..**



## சுரேஷ் பிரேமச்சந்தின் செவ்வி

**ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முக்கியமான சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்காக தலைமைத்துவக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பான மேலதிக தகவல்களைத் தர முடியுமா?**

கடந்த சில மாதங்களாகவே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான புதிய யாப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கான திருத்தங்கள் பல முன்வைக்கப்பட்டிருந்தன. இறுதியாக கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான இறுதி வடிவம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இது முதலாவது விடயம்.

இரண்டாவதாக, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான நிர்வாக சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்காக 15 பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப் பட்டிருக்கின்றது. இது ஐந்து பெண்களையும் இணைத்துக்கொள்வதன் மூலமாக 20 ஆக அதிகரிக்கப்படும். இதனைவிட, இதில் உள்ளடங் கியுள்ள கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய இணைத் தலைமை இதில் முக்கிய அம்சமாக இருக்கின்றது.

இவற்றைவிட, கட்சிக்கான செயலாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். செயலா ளருடைய பதவிக்காலம் இரண்டு வருடங்களுக்கு இருக்கும். அதனைவிட கட்சிக்கான ஒரு பொருளாளரும் பொருளாளரை உள்ளடக்கிய நிதிக்குழு ஒன்றும் நிறுவப்பட்டிருக்கின்றது. எமது கூட்டணியை வடக்கு, கிழக்கில் மாவட்ட ரீதியாக, மாகாண ரீதியாக பலப்படுத்தும் வகையில் தேசிய அமைப்பாளர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இந்த தேசிய அமைப்பாளரின் கீழ் இரண்டு மாகாண அமைப் பளரும் விரைவாக நியமிக்கப்படுவார்கள். இதனைவிட கட்சிக்கான பேச்சாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

முக்கியமாக நாம் பார்ப்போமாக இருந்தால், இலங்கையின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் - குறிப்பாகச் சொல்லப்போனால் திம்புவுக்குப் பின்னர் பல்வேறுபட்ட முன் னணிகள் அமைக்கப்பட்டன. ஆனால், இப் போதுதான் முதல்தடவையாக இவ்வாறு அமைக் கப்படும் கூட்டணி ஒன்றுக்கு யாப்பு வடிவம், நிர்வாகம் என்பவற்றுடன் கட்டமைக்கப்பட்ட ஒரு அரசியல் நிறுவனமாக இப்போதுதான் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறான ஒரு செயற்பாட்டை முன்னெடுப் பதற்கான பணியை ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழரசுக் கட்சியுடன் போராடி வந்திருக்கின்றது. இதற் காக உள்ளேயும் வெளியேயும் 15 வருடங் களுக்கு மேலாக போராடியும், யாப்பு ஒன்றை உருவாக்குவதையோ, அதனைப் பதிவு செய் வதையோ அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், அது எந்தவிதமான நிர்வாக கட்டமைப் பும் இல்லாத ஒரு கூட்டமைப்பாகத்தான் இது இருந்தது. அந்த விஷயங்கள் அனைத்தும் இதில் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

எதிர்காலத்தில் இந்த கூட்டமைப்பு இந்த யாப்பின் பிரகாரம் செயற்படுமாக இருந்தால், அது தமிழ் மக்களின் விடுதலைக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்யக்கூடிய அமைப்பாக மாறும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

**இந்தியப் பிரதமரை சந்திப்பது தொடர்பாகவும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் என எதிர் பார்க்கின்றீர்களா?**

முக்கியமாக மாற்றமடைந்திருக்கக்கூடிய பூகோள சூழல் என்பதும் மாறியிருக்கக்கூடிய இந்தப் பிராந்திய சூழலும் முதலில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அன்றைய கூட்டத்தில் பல விஷயங்களை நாம் பேசியிருந்தோம், முக்கியமாக-ஜெனிவாவில் இப்போது வெளிவந்திருக்கும் வாய்மொழி மூலமான அறிக்கையும், அடுத்த செப்டம்பரில் வரப்போகும் ஜெனிவா விஷயங் களை எவ்வாறு கையாள்வது என்பதையிட்டும் பேசியிருந்தோம்.

அதேவேளை, புதுடில்லி செல்ல வேண்டும், அங்கு நாம் தற்போதைய நாட்டு நிலைமைகள் மற்றும் 13 ஆவது திருத்தம் தொடர்பாகவும் பேச வேண்டும் என்ற கருத்துக்களும் முன்வைக் கப்பட்டன. ஏற்கனவே நாங்கள் கடந்த மாதம் இந்தியத் தூதுவரை சந்தித்து, 13 ஆவது திருத்தம் குறித்தும், நாட்டின் நிலைமைகள் தொடர் பாகவும் கலந்துரையாடியிருக்கின்றோம். அதனை விட புதுடில்லி சென்று பேசுவதற்கான சந்தர்ப் பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் நாம் கேட்டிருக்கின்றோம். இரண்டு மாதத்துக்குள் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என எமக்குக் கூறப்பட்டது. ஆனால், அதற்கான பதில் இதுவரையில் கிடைக்கவில்லை.

இப்போது எதிர்வரும் 20-21 ஆம் திகதி களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டில்லி செல்வதாக இருக்கின்றார். கடந்த சில மாதங்களாக 13 ஐ நிறைவேற்றுவதாக ஜனாதிபதி கூறுவதும், பின்னர் எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் இருப்பதும், தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறுவதும், அதனை பின்னர் தீர்க்கத்தவறுவதும், தொடர்ந்தும் தமிழ் மக்கள் பௌத்த விகாரைகளால் பாதிக்கப்படுவது போன்ற பல்வேறு விஷயங்கள் இருக்கின்றது. எனவே இவை தொடர்பாக காத்திரமான கடிதம் ஒன்றை நாங்கள் உடனடியாக இந்தியப் பிரதமருக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் அனுப்ப வேண்டும் எனத் தீர்மானித்தோம்.

அதனூடாக தற்போதுள்ள உண்மை நிலவரங்களை நாம் வெளிப்படுத்துவதும், இந்த வெளிப்படுத்தல் என்பது அவர்கள் இலங்கை ஜனாதிபதியுடன் பேசுகின்ற போது, அவருக்கு இந்த விஷயங்கள் சுட்டிக்காட்டப்படலாம் என்ற அடிப்படையில் இங்குள்ள நிலைமைகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற அடிப்படையிலும், இந்தக் கடிதத்தை எழுது வதற்குத் தீர்மானித்தோம்.

எமது கடிதம் நிச்சயமாக அவர்களால் பார்க்கப்படும் என்று நான் நம்புகின்றேன். ஏனெனில், நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இந்தப் பிராந்தியத்தில் இலங்கைக்குள் சீனாவின் ஆதிக்கம், குறிப்பாக வடக்கு, கிழக்கில் பல செயற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் வடக்கு கிழக்கில் ஒரு வலுவான மாகாண சபை இருப்பதன் மூலமாகத் தான் அந்த மக்களுடைய தேவைகளை நிறை வேற்றக் கூடியதாக இருக்கும் என்பதோடு மட்டு மல்லாமல், ஏனையவர்களின் ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கலாம். இந்தியாவுக்கும் வடக்கு, கிழக்கில் மாகாண சபை செயற்பட வேண்டும் என்ற தேவையும், 13 ஐ முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற தேவையும் இருப்பதாகத்தான் நாங்கள் கருதுகி றோம்.

இந்த அடிப்படையில் நாம் ஏற்கனவே கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகருடனும் பேச்சுக்களை நடத்தியிருக்கிறோம். இவை தொடர்பில் புதுடில்லிக்கும் தெரியப்படுத்தி, அதனூடாக ஜனாதிபதி அங்கு செல்லும் போது இந்தியத் தரப்பினூடாக அதிகளவு அழுத்தங்களைக் கொடுப்பதற்காகத்தான் இந்தக் கடிதத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்ப இருக்கின்றோம்.

**இடைக்கால நிர்வாக யோசனை ஒன்று ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டது. சி.வி.விக்னேஸ்வரனும் அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அதனை நீங்கள் நிராகரித்தது எதற்காக?**

உண்மையில் இது ஒரு இடைக்கால நிர்வாக சபையல்ல. இது ஒரு ஆலோசனைச் சபை. அவர்கள் யாருக்கு ஆலோசனை சொல்லப்போகின்றார்கள், ஜனாதிபதிக்கா, அல்லது ஆளுநருக்கா என்ற ஒரு விடயம் இருக்கின்றது. இரண்டாவதாக இந்த ஆலோசனைச் சபை என்ன செய்யலாம் எனப் பார்த்தால், இது நியதிச்சட்டங்களைஉருவாக்கலாம். மாகாணங்களில் ஜனாதிபதி மூலமாக செய்யக் கூடிய விஷயங்களைச் செய்வதற்குத் தூண்டலாம் என்றும் சொல்லப்படுகின்றது. நியதிச் சட்டங் களை உருவாக்க ஜனாதிபதியோ, ஆளுநரோ ஒத்துழைப்பார்களோ என்ற கேள்வி ஒன்றும் உள்ளது.

இந்த இடைக்கால நிர்வாகம் என்பது வடக்கு கிழக்குக்கு அவசியம் என்று சொல்லப் பட்டாலும் கூட, இப்போது ஜனாதிபதி அனைத்து மாகாணங்களுக்கும் ஆலோசனைக் குழுக்களை அமைக்கப் போகின்றாரா அல்லது, ஒட்டு மொத்தமாக அனைத்து மாகாணங்களுக்கும் ஆலோ சனைச் சபை ஒன்றை உருவாக்கப்போகின்றாரா என்பதும் தெளிவற்றதாகவே உள்ளது. விக் னேஸ்வரன் கொண்டுவந்த இந்த ஆலோசனைச் சபை என்பது 13 ஆவது திருத்தத்தில் ஒரு அம்சமாக

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சா(தி)தீ...

# தமிழ்த்தேசியத்தின் சாபக்கேடு!

## இறுதிப் பகுதி

பா.அரியநேத்திரன்

அன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் "உயர்குடி" இந்துக்களே கோவில்களில் வழிபட அனுமதிக்கப்பட்டு வந்தனர். இவ்வாறே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலும் தாழ்ந்த சாதி இந்துக்கள் அனுமதிக்கப்படவில்லை. 1950கள், 60களில் ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் யாழ்ப்பாணத்தில் எழுச்சி பெற்றன. 1956 சூலை9 இல் நல்லூர் கந்தசுவாமி கோவில், வண்ணார் பண்ணைச் சிவன் கோவில், பெருமாள் கோவில் போன்ற பல புகழ்பெற்ற கோவில்கள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டன. 1968 ஆம் ஆண்டில் பல நூற்றுக்கணக்கான தாழ்ந்த சாதி இந்துக்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.



இப்போராட்டத்தை வெள்ளாளர் எனப்படும் உயர்சாதி இந்துகள் குறிப்பாக செ. சுந்தரலிங்கம் தலைமையில் வன்முறைகள் மூலம் எதிர்கொண்டனர் 1968 யூன் மாதத்தில் தாழ்த்தப்பட்டோர் தடையை மீறிக் கோவிலின் உள்ளே நுழைந்தனர்.

இதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலையீட்டை அடுத்து அவர்களுக்கு கோவிலின் உள்ளே செல்வதற்கு அனுமதியை கோவில் நிருவாகத்தினர் வழங்கினர். உயர்குடிகளினர் எனப்படுவோரின் எதிர்ப்புக்குத் தலைமை வகித்த செ சுந்தரலிங்கத்திற்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இலங்கை மீயுயர் நீதிமன்றம் அவரை "சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தின்" கீழ் குற்றவாளியாக அறிவித்து ரூ. 50 தண்டம் அறிவித்தது. இந்தச் சட்டம் 1957 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

சாதி ஒடுக்குமுறை பல் நெடுங்காலமாக யாழ்ப்பாணத்தில் பேணப்பட்டு வந்தாலும் அதனை தந்தை செல்வா தலைமையிலான இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி முதன்முதல் 1957 யூலையில் மட்டக்களப்பில் நடந்த மகாநாட்டில் தீண்டாமை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரிடையே இன்றளவும் நிலவி வரும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் அநீதிகளையும் குறிப்பாகத் தீண்டாமையை ஒழிப்பதற்கு, அகிம்சை நெறி வழுவாது சத்தியாக்கிரக வழியைக் கைக்கொண்டு அதற்கென ஓர் இயக்கத்தை ஆரம்பித்து உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி, ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வரும்படி தமது பூரணசுதந்திரத்துக்காகவும், சுயமரியாதைக்காகவும் போராடுகின்ற தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இந்தத்தேசிய சிறப்பு மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது. என மட்டக்களப்பு இலங்கை தமிழரசுகட்சி மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர் 1958 மே 25 இல் வவுனியாவில் நடந்த இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி மாநாட்டிலும் தீண்டாமை ஒழிப்புக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது.

"சமூக ஏற்றத் தாழ்வுகளையும், அநீதிகளையும் அகற்றி பிளவுபட்டு நிற்கும் தமிழ் மக்களை ஒன்று திரட்டல் என்ற கட்சியின் அடிப்படை இலட்சியங்களுக் கேற்ப எமது மக்களின் ஒரு பகுதியினரை சிறப்புரிமையற்றவர்களாக வைத்திருப்பதை அகற்றி, அவர்களுக்கும் சம உரிமை வழங்க மக்களைத் தூண்டும் போராட்டத்தை நடத்துவதென்றும் அதற்கான தெரிவுக்குழுவுக்கு மக்கள் அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுவதென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தீர்மானிக்கிறது" என வவுனியாவிலும் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மேற்படி தீர்மானங்கள்தாழ்த்தப்பட்ட மக்களைதமிழ்தேசிய அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவை எனலாம்.

1957ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமூகக் குறைபாடுகள் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்படுகிறது. இதன்படி சமூகத்தில் சாதியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் அநீதிகள் தண்டனைக்குரிய குற்றமாகின்றன. எனவே இதிலிருந்து சட்ட ரீதியாக கட்சி உறுப்பினர்கள் தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழ்த் தேசியத்தை விட்டு விலகாதிருக்கவும் கட்சி இவ்வாறான ஒரு தீர்மானத்தினையும் கொள்கையினையும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது.



தமிழரசுக் கட்சி தனது தீர்மானத்தில் தமிழ் சமூகத்தில் இருக்கின்ற சமூக ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும் என்றே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மதநிலை கடந்து கட்சியின் கொள்கையினையும் அதன் தீர்மானத்தினையும் கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு கட்சித் தொண்டனுடைய கடமையாகும் என இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கருதியது ஆனால் கட்சியில் உள்ளவர்கள் கட்சியின் தீர்மானத்தினைப் பொருட்படுத்தாது நடத்து கொண்ட சம்பவங்களும் அப்போது இருந்தது என்பது உண்மை.



யாழ்ப்பாண வேளாளர் என்ற அடையாளமும் அதன் அடக்குமுறையும் யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேச மக்களுக்கும் பொதுவான விடயமாக இருந்தன.

இந்த யாழ் வேளாள மேலாண்மைக்கு எதிராக 1970 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் பதிலளித்தனர். அதாவது தமிழரசுக் கட்சியினதும் தமிழ் காங்கிரஸ் கட்சியினதும் முக்கியமான உறுப்பினர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அந்தவகையில் அ. அமிர்தலிங்கம், ஜி. ஜி. பொன் னம்பலம், மு. சிவசிதம்பரம், ஈ. எம். வி. நாகநாதன், ரீ. சிவசிதம்பரம் ஆகியோர் தோல்வி கண்ட வரலாறுகளையும் மறுக்க முடியாது.



ஆனால் 1976, மே14, வட்டுக் கோட்டை தீர்மானம் அதன் பின்னர் இளைஞர்களின் ஆயுதப்போராட்ட ஆரம்பம் எழுச்சி பெற்ற பின்னர் சாதிப்பிரிவினைகள் முற்றாக குறைந்து தமிழ்தேசிய விடுதலை போராட்டம் மேலோங்கி இருந்தது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கரந்தடி தாக்குதலில் இருந்து மரவுப் படையணியாக வளர்சியடைந்த போது தமிழ்மக்கள் மத்தியில் சாதிப்பிரிவினை இருக்கவில்லை தமிழன் என்ற இனரீதியான அடையாளமும் தமிழ்தேசிய விடுதலை என்ற உணர்வு மட்டுமே வடக்கு கிழக்கு முழுவதும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இனவாத செயற்பாடுகளே நாடு பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்திலும் பின்நோக்கிச் செல்லக்காரணம்

மட்டு.நகரான்

ஒரு நாட்டில் ஒரு இனத்திற்கு அநீதியேற் படும்போது அந்த இனம் தமக்கான அநீதியை வெளிப்படுத்தும்போது அது ஏனைய இன மக்களினால் இனவாதமாக பார்க்கப்படுகின்றது. அதேபோன்று ஒரு தொழிலாளர் வர்க்கம் தமக்கான அநீதியேற்படும்போது அதிலும் இனவாதம் நோக் கப்படுமானால் அந்த தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமையென்பது மிகவும் கவலைக்குரிய தாகவே மாற்றம்பெறும்.

இலங்கையினைப்பொறுத்த வரையில் சகல வளங்களையும் கொண்ட நாடாக பார்க்கப்படுகின்றபோதிலும் இன்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நாடாக மற்றம்பெற்றுள்ளது. இன்னும் இந்த நாட்டில் இனவாத அடிப்படையினைக்கொண்டு முன்னெடுக்கும் செயற்பாடுகளே இந்த நாடு பின் நோக்கிச்செல்வதற்கான காரணமாக அமைகின்றது.

இலங்கையினைப்பொறுத்த வரையில் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கருதப்படும் விவசாயத்துறையினைப்பொறுத்த வரையில் அதில் காட்டப்படும் இனவாத ரீதியான நோக்குகள் இன்று அதற்குள் பாரிய தாக்கத்தினை செலுத்தி வருகின்றது.

நாங்கள் இந்த நாட்டில் விவசாயத்துறை யினை எடுத்துக்கொண்டால் இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களின் முதுகெலும்பாகவும் இந்த விவசாயத்துறை காணப்படுவதன் கார ணமாக நாடு நாசமாக போனாலும் பரவா யில்லை தமிழ் பேசும் மக்கள் பொருளாதார ரீதியாக முன்னேறிவிடக்கூடாது என்பதில் சிங்கள மேலாதிக்க அரசுகள் செயற்பாடுகள் காணப்படு கின்றன.

நாங்கள் இலக்கு இதழ் ஊடாக தொடர்ச் சியாக விவசாயத்துறை தொடர்பில் எழுதி வருவதன் காரணம் தமிழ் தேசியத்தின் முக்கிய பொருளாதார வளமாக காணப்படும் விவசாய துறையினை அழிக்கும் செயற்பாடுகள் திட்ட மிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றது. அதனை வெளிக்கொணரவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. அதன்காரணமாக அவை தொடர்பில் வெளிக்கொணரவேண்டிய அவசியம் இருக்கின்றது.

இலங்கையில் விவசாயதுறையில் நெல் அறுவடையில் நான்காவது மாவட்டமாகவுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் தினத்தில் விவசாயிகள் பாரியளவிலான போராட்டங்களுக்கு தயாராகிவருகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் புறக்கணிப்பு மற்றும் திட்டமிட்ட வகையில் விவசாய காணிகளை பறிப்பதற்கு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிக்கு எதிராகவே இந்த போராட்டங்களை முன்னெடுக்கும் சூழ்நிலைக்கு நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாகமட்டக்களப்புமாவட்டவிவசாயி களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற் பாடுகள் நீண்டகாலமாக முன்னெடுக்கப் படுவதன் காரணமாக பல விவசாய நிலங்கள் விவசாய செய்கையிலிருந்து விலகிச்செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் வரையில் நெற்செய்கை முன்னெடுக்கப் படுகின்றது. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் மேட்டு நில பயிர்ச்செய்கை முன் னெடுக்கப்படுகின்றது. சுமார் மூவாயிரம் ஏக்கர் காணிகளில் மேய்ச்சல்தரைகளாக கால்நடை வளர்ப்போர் பயன்படுத்திவருகின்றனர். இவ்வா றான நிலையில் விவசாயத்தினையும் ஏனைய துறைகளையும் பலவீனப்படுத்துவதற்கும் காணி களை அபகரிப்பதற்கும் முன்னெடுக்கும் முயற்சி களை தடுக்கும் வகையிலும் அதனை வெளிக் கொணரும் வகையிலும் போராட்டங்களை நடாத்தப்போவதாக மட்டக்களப்பு மாவட்ட கமக்காரர்கள் அமைப்புகளின் அதிகாரசபையினர் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் விவசாய அமைச்சானது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளை தொடர்ச்சியாக புறக்கணித்துவரும் நிலையில் அவரை பதவி விலக்கவேண்டும் என்று கோரிக் கையினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் நிலையில் இலங்கை அரசாங்கம் கிழக்கு மாகாண விவசாயிகளை கவனத்தில் கொள்ளாமல் முன்னெடுக்கும் தீர்மானங்கள் குறித்தும் தொடர்ச்சியாக விசனங்களை தெரிவித்துவருகின்ற னர். மத்தியில் விவசாய துறை தொடர்பில் எடுக் கும் தீர்மானங்கள் மூலம் கிடைக்கும் எந்த நன்மையும் கிழக்கு மாகாண விவசாயிகளை வந்தடைவதில்லையென்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுவருகின்றன.



இவ்வாறான நிலையிலேயே மகாவலி திட்டம் ஊடாக மட்டக்களப்பில் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றன. இந்த காணி அபகரிப்புகளுக்காக அரசாங்கத்தின் ஊதுகுழல்களாக செயற்படும் பிள்ளையான் மற்றும் வியாழேந்திரன் போன்றவர்களை அரசாங்கம் பாவிக்கும் நிலைமை உருவாகியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தினைப்பொறுத்த வரையில் சுமார் 25வீதத்திற்கும் அதிகமான விவசாய காணிகள் மகாவலி வலயம் என்ற திட்டத்திற்குள் காணப்படுகின்றதனால் எதிர் காலத்தில் விவசாயதுறைக்கு ஆபத்துகள் ஏற்படு வதற்கான சாத்தியங்கள் அதிகளவில் காணப் படுகின்றன. குறிப்பாக தமிழ் பேசும் விவ சாயிகள் வைத்திருக்கும் காணிகளை பறித்து பெரும்பான்மையின விவசாயிகளுக்கு வழங்கும் நிலைமையும்உருவாகும்சாத்தியங்கள்அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றினை எதிர்க்க வேண்டிய பொறுப்பும் இன்று விவசாய துறையில் உள்ளவர்களிடம் உள்ளதனால் அதற் கான எதிர்ப்புகளை தெரிவிப்பதற்கு தயாராகி வருகின்ற னர்.

இதேபோன்று விவசாயத்துறையுடன் பின்னிப்பிணைந்த நிலையில் காணப்படுவதே மேய்ச்சல்தரையாகும். இதுவரையில் மேய்ச்சல் தரை காணிகளை வர்த்தமானிப் படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. சுமார் பத்து வருடத்திற்கு மேலாக அப்பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துவரும் நிலையிலும் பல்வேறு போராட் டங்களைநடாத்தியுள்ளநிலையிலும்இதுவரையில் அதனை வர்த்தமானிப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இன்று மகாவலி காணிகளை அபகரிப்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேய்ச்சல்தரைகாணிகளையும்அபகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் அதேநேரம் மகாவலி திட்டத்தின் கீழ் விவசாய காணிகளையும் அபகரிக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அடுத்த கட்டம் என்ன செய்யவேண்டும் என்பதற்கான செயற்பாடுகளை விவசாய அமைப் புகளும் கால்நடை பண்ணையாளர்கள் அமைப்பும் முன்னெடுத்துவருகின்றது.

இவ்வாறான நிலையிலேயே விவசாயிகள் தமதுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற் பாடுகளுக்குஎதிராகவீதியிலிறங்கிபோராடுவதற்கு தயாராகிவருகின்றனர். இவ்வாறான நிலையில் விவசாயிகளுக்கு கைகொடுக்கவேண் டிய தார்மீக பொறுப்பு தமிழ் தேசிய அரசியலில் உள்ள அனைவருக்கும் உள்ளது.

'தமிழர்களின் பொருளாதாரத்தினை தடுப்பதற்கு இந்த அரசாங்கம் தமிழர்களின் விவசாயத்துறையினை புறக்கணிக்கும் நிலை மையே காணப்படுகின்றது. பாராளுமன்றத்தில்பல தடவைகள் பேசியிருக்கின்றோம். விவசாயி களுக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற் படுவது அவசியமாகும். விவசாயத் துறை இந்த மாவட்டத்தில் கட்டியெழுப்பப்படவேண்டுமா னால் அதற்கான தனியான திட்டங்களை அரசாங்கம் வகுக்கவேண்டும். ஆனால் இந்த அரசாங்கமும் விவசாய அமைச்சரும் தமிழ் விவசாயிகள் குறித்து கவனம் செலுத்துவதில்லை. நெல்கொள்வனவு, உரம் விநியோகம் என பல்வேறு வகையிலும் தமிழ் பேசும் விவசாயிகள் புறக்கணிக்கப்படுகின்றனர். மகாவலி என்ற பெயரி லும் தொல்பொருள் என்ற பெயரிலும் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் முன் னெடுக்கப்படுகின்றது.

இதற்கு பக்கத்துணையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திவேண்டும் என்று தமிழ் மக்கள் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பிய இராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் இதற்கான முழுமையான ஆதரவினை வழங்குகின்றனர். இவர்களுக்குதகுந்த பாடத்தினை எதிர்காலத்தில் மக்கள் வழங்கவேண்டும். தமிழ் தேசியத்தின் மூலமே தமிழர்களின் நிலங்கள், வளங்கள் பாதுகாக்கமுடியும் என்பதை தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டும். கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியத்திற்கு எதிரானவர்களுக்கு அதிகளவான தமிழ் மக்கள் வாக்களித்ததன் மூலம் இந்த நிலைமையினை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலைமையினை மாற்றியமைக்க வேண்டுமானால் அனைவரும் தமிழ் தேசிய சக்திகளாகஒன்றுபட்டுபோராடமுன்வரவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

எவ்வாறானாலும் விவசாயிகளை பாது காக்கவேண்டிய பொறுப்பு அனைத்து தமிழ் தேசிய அரசியல்வாதிகளுக்கும் உள்ளது. விவசாயத்துறை என்பது தமிழர்களின் இருப்புசார்ந்த பிரச்சினையாகவே பார்க்கப்படவேண்டும். கடந்த காலத்தில் இந்த பிரச்சினை ஒரு விவசாய சமூகம் சார்ந்த பிரச்சினையாகவே மட்டுமே பார்க்கப்பட்டது. இன்று எல்லைகளை பாதுகாத்து நிற்பதும் விவசாயிகளாகும். அதன்காரணமாகவே எல்லைப்பகுதிகளில் உள்ள விவசாய காணிகளை அபகரித்து அங்கு சிங்களவர்களை குடியமர்த்தும் செயற்பாடுகளை சிங்கள தேசிய பேரினவாதம் முன்னெடுத்துவருகின்றது. இந்த சதியை முறி யடித்து தமிழர் நிலங்களை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்ற கோரிக் கையினை இங்கு முன்வைக்கின்றோம்.

• • •

# பொருளாதார நெருக்கடி நிலையால் கொழும்பு மத்தி வீதியோர வியாபாரிகளின் அவல நிலை

## இறுதிப் பகுதி

ஹஸ்பர் ஏ ஹலீம்

அரசியல்வாதிகள் காலத்துக்கு காலம் வாக்குறுதிகளை வழங்கிய போதும் வியாபாரிகள் நடைபாதைகளை வியாபாரத்துக்கு பயன்படுத்துவது தொடர்பில் திட்டவட்டமான சட்டங்கள் எவையும் இல்லை என்பது நடைபாதை வியாபாரிகள் கொண்டுள்ள உண்மையான கரிசனையாகவுள்ளது)



கொழும்பு நகரில் உள்ள வீதியோர வியாபாரிகளுக்கு என்று கொழும்பு மாநகர சபை விதிகள் எதனையும் விதிக்கவில்லை. அவ்வப்போது தமது வசதிகளுக்கு ஏற்ப சில ஒழுங்குமுறைகளை மாத்திரம் செய்கின்றனர். வாடகைப் பணமும் பெறுகின்றனர். ஆனால் இது பற்றி கொழும்பு மாநகர சபை அதிகாரிகளிடம் அதிகாரபூர்வமாக அறியமுடியவில்லை. நடைபாதைகளை வியாபாரத்துக்கு பயன்படுத்துவது தொடர்பில் சம காலத்தில் காணப்படும் ஏதாவது ஒழுங்குவிதிகள் தொடர்பான விபரங்களை கொழும்பு மாநகர சபை அதிகாரிகளிடம் கோரிய போதும், அவ்வாறான தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை).

(மக்கள் பரபரப்பாக இயங்கும் வேளைகளில் வாகனங்களுக்கு அல்லது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதற்கு நடைபாதை வியாபாரிகள் அனுமதிக்கப்படுவதில்லை, இதன் காரணமாகவே அவ்வாறான வேளைகளில் நடைபாதை வியாபாரிகள் பொலிசாரினால் அகற்றப்படுகின்றனர். அத்துடன், சில ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பல்வேறுபட்ட தொழிற் சங்கங்கள் முன்னெடுக்கும் பேரணிகளின் கருப் பொருட்களில் உள்ள விடயங்கள் நடைபாதை வியாபாரிகளையும் பாதிக்கும் விடயங்களாக உள்ள போதும் அவ்வகையான முன்னெடுப்புகள் நடைபாதை வியாபாரிகளுக்கு மேலதிக பிரச்சினைகளையும் கொண்டு வருகின்றன. இவற்றின் போது ஏற்படுத்தப்படும் வீதித் தடைகள் மற்றும் பாதைகள் மூடப்படுதல் என்பன இவ்வியாபாரிகள் தற்போது மேற்கொள்ளும் சிறிய அளவான வியாபாரங்களுக்கும் பாதகமாக மாறுகின்றன).

ஆனால் விதியோர வியாபரரிகள் இது பற்றித் தமது கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். தத்தமது அரசியல் நோக்கில் அரசியல்வாதிகள் அவ்வப்போது இது பற்றிப் பேசினாலும் இதுதான் சட்டம் என்ற ஒரு ஒழங்குவிதி இல்லை என்று வியாபாரிகள் கூறுகின்றனர். ஏனைய வர்த்தகர்களுக்குச் சங்கம் இருப்பது போன்று தமக்குச் சங்கங்கள் இல்லை எனவும் இவர்கள் கவலை வெளியிட்டனர்.

இடங்களுக்கு நில வாடகை அறவிடும் முறைமை வியாபாரிகள் பயமின்றி தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிவகுக்கும் என்பதால் அவ்வாறான ஒரு முறைமை தமக்கு வசதியானதாக அமையும் என ஒரு வியாபாரி கூறினார்: "இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது முதல் மத்திய கொழும்பு பிரதேசத்தில் வீதியோர வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அவர்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்வதில் எந்தவித கவனத்தையும் செலுத்தவில்லை.")

இவர்கள் குடும்ப வாழ்க்கையில் நாளாந்தம் தங்களது பாடசாலை செல்லும் பிள்ளைகள் உட்பட பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்கள். கடந்த காலங்களை விடவும் தற்போதுள்ள நிலையில் அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு, பொருட்கள் தட்டுப்பாடு போன்றன நிலவுகிறது இது இவ்வாறு இருக்க மழை காலங்களில் வீதியோர வியாபார நடவடிக்கைகளை கொண்டு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுவதுடன் நாட்டில் ஏற்பட்ட உறுதியற்ற தன்மை காரணமாக அரசாங்கத்திற்கு எதிரான வீதிமறியல் போராட்டங்கள் கொழும்பு நகரில் பல தொழிற் சங்கங்கள், அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என போராட்டங்களை நடாத்துகின்றனர் இதனால் கொழும்பு மத்திய பகுதிக்கு செல்ல முடியாத நிலையில் வீதியோர வியாபார பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் வீதி தடைகள் மூலமாக பாதிக்கப் படுகின்றன.

பொருளாதார பின்னடைவு மூலமாக நாட்டில் இவ்வாறான நிரந்தர இடமின்றி வீதியோர வியாபாரிகள் கடும் மழை வெயில் என பாராது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் தாமும் தங்களது பிள்ளைகளும் வாழ வேண்டும் என்பதற்காக இவ்வாறு தங்களை தாங்களே பொருளாதார சுமையில் மாய்த்துக் கொள்கின்றனர்கள்.

இவ்வாறான விடயங்களுக்கு எதிராக அரசுக்கு எதிராக போராட்டத்தில் இறங்கியுள்ள பல தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் விலை குறைப்பு போதாது, வரி அறவீடு, அரச சொத்துக்களை தனியாருக்கு விற்பனை செய்ய முயற்சித்தல், பயங்கரவாத தடை சட்டத்துக்கு புதிய எதிர்ப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிரான போராட்டம் கொழும்பு நகர் பகுதிகளில்தான் இடம் பெறுகின்றன.

நடை பாதை வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு தொடர்பில் அண்மையில் (06.04.2023) கொழும்பு துறை வியாபாரச் சங்கம் மற்றும் நடை பாதை வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றின் வரி பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இதன் போது உறுதியளித்தார்.இதன்போது வியாபாரிகளுக்கான அடையாள அட்டை விநியோகிப்பது பற்றியும் ஆராயப்பட்டது.(இவ்வமைப்பு பெரிய கடைகளை நடத்துவோரை பிரதிநிதித்துவம் செய்கின்றது)

பொருளாதார நெருக்கடி மக்கள் மத்தியில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது சாதாரண கூலித் தொழிலாளி முதல் நடுத்தர வர்க்க மக்களும் இதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிகமான நெருக்கடி உள்ள பகுதியில் வியாபாரம் செய்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சிப்பதும் ஒரு வாழ்க்கைப் போராட்டமாகவே உள்ளது.

சாதாரண குடிமகன் குடும்ப ரீதியாக உணவு தேவைகளை நிவர்த்தி செய்தல், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல் மாதாந்த கட்டணங்களை செலுத்துதல், கடன் தவனைகளை செலுத்துதல் ஆகிய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதிலும் இவ் வியாபாரிகள் பல பிரச்சினைகளுக்கு பொருளாதார ரீதியான சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியானது மக்களை வறுமை நிலைக்கு தள்ளியுள்ளது இதனால் கையிருப்பில் பணமின்றி கொள்வனவு சக்தி குறைவடைந்த நிலையில் தொழில் இன்றி பல இளைஞர்கள் காணப்படுகிறார்கள்.

ஏனைய வர்த்தகத் துறையுடன் ஒப்பிடும் போது வீதியோர வியாபாரிகளின் நிலை நாளாந்த நடவடிக்கைகளில் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது எடுத்துக்காட்டாக கொரோனா நோய் தாக்கம் காரணமாக பல பின்னடைவுகளை சந்தித்த இவர்கள் தற்காலத்தில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.



ஏனைய துறைகளைப் போன்று முன்னேறுவது கடினம் .இருந்த போதிலும் இவர்களுடைய நிலையை விரிவுபடுத்தவும் வருமானத்தை அதிகரிக்கவும் அரசாங்கம் புதிய திட்டமொன்றை வகுக்க வேண்டும். வீதி யோர தடைகள் சில நேரம் கொழும்பு மத்திய பகுதியில் பொலிஸாரினால் ஏற்படுத்தப்படுவதுண்டு இதனால் போக்குவரத்து சிரமங்கள் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

போக்குவரத்து பொலிஸார் வீதியோரங்களில் விற்பனை செய்யும் வர்த்தகர்களை சில வேலை அப்புறப்படுத்துமாறும் போக்குவரத்துக்கு இடைஞ்சலின்றி செயற்படுத்துமாறும் கூறுகின்றனர். ஆனாலும் நிரந்தரமான விற்பனை செய்யக் கூடிய இடவசதி போதாமை பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க டொலரில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது இதனால் வியாபாரத்தை ஆரம்பிப்பதாயின் மூலதனச் செலவானது கடந்த காலங்களை விடவும் தற்போது பல மடங்கு வரை அதிகரித்துள்ளது. பல வியாபாரிகள் வங்கிகளில் கடன் பெற்றிருப்பார்கள் இதனை மீளச் செலுத்த முடியாது அதிகரித்த வட்டி வீதம் போன்றன அவர்களை வாட்டி வதைக்கிறது. அதிகமான பொருட்கள் சுமார் 90 வீதமானவை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப் படுகிறது இதன் மூலம் வரிச் சுமையும் அதிகரித்துள்ளது இதனால் சாதாரண பொருட்களின்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



## 2009 மே18 க்கு முன்னர்

# போதைப்பொருள் பாவனை

## வடக்கு கிழக்கில் இருக்கவில்லை!

பா.அரியநேத்திரன்

உலக அளவில் போதை எதிர்ப்பு தினம் ஜுன் 26, (2023,ஜுன்26) அனுஷ்டிக்கப்படுகிறது. போதைப் பழக்கம் பல தலைமுறைகளை பாதிக்கக்கூடிய மோசமானஒன்று. போதைபொருள் கடத்தலும், ஆயுதக்கடத்தலும் உலகில் மிகப் பெரிய தொழிலாக நடந்து வருகிறது.

உண்மையில் இலங்கையைப்பொறுத்தவரை போதைப்பொருட்கள் கடத்தியவர்கள், கொண்டு சென்றவர், வைத்திருந்தவர்கள் என கைது செய்யப்பட்ட பல செய்திகள்தினமும் வெளிவருவதை காணலாம். போதைப்பொருட்கள் பிடிபடுவது மட்டும் செய்தியாக வந்தாலும் பிடிபடாமல் பல கோடி பெறுமதியான போதைப்பொருட்கள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படுகிறது என்பது உண்மை.

இதில் வேதனையான விடயம் என்னவென்றால் வடக்கு கிழக்கில் போர் மௌனித்தபின்னர் 2009, மே,18க்கு பின்னர் 14, வருடங்களில் வடக்கு கிழக்கு தாயகத்தில் இளைஞர்கள் மாணவர்கள் மத்தியில் திட்டமிட்டு போதைப்பொருள் பாவனைகளில் அவர்கள் உள்ளீர்கப்படுகின்றனர் என்ற சந்தேகம் பரவலாக உள்ளது.

போதை என்பது மதுபானம், கேரளா கஞ்சா தொடக்கம் தொடக்கம் தற்போது பரவலாக பேசப்படும் ஹரோயின்ஐஷ் போதை மாத்திரைகள் உட்பட பலவகைகள் அடங்கும்.

வடக்கு கிழக்கில் 2009, மே,18, க்கு முன்னர் ஈழ விடுதலை ஆயுதப்போராட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை முப்படையினருக்கும் இடையில் இடம் பெற்றபோதிலும் வடக்கு கிழக்கு இளைஞர்கள் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமும், கட்டுப்பாடும், நேர்மையும், பண்பும், ஒற்றுமையும், மற்றவர்களை, மதிக்கும் பண்பும், கீழ்ப்படிவும், தமிழ்தேசியபற்றும் இருந்தது என்பதை எவராலும் மறுதலிக்கமுடியாது.

ஆனால் இன்று அப்படியான நிலைமை இல்லை. தமிழ் இளைஞர்களின் தமிழ்தேசிய சிந்தனையை திசை திருப்பும் நோக்கில் போதைப்பொருள்களை கருவியாக பயன்படுத்தி தமிழ் இளைஞர்களிடையே குரோத மனப்பான்மையை ஊக்குவிக்கும் செயல்களில் மறைமுகமாக அரசாங்கம் ஈடுபடுகின்றதா என்ற சந்தேகம் உள்ளது.

அராஜகம் மேலோங்கி ஆணவம் தான் நினைத்ததை செய்யும் விதமாக வாள் வெட்டு கும்பல்களும், அடிதடி கும்பல்களும்,தீய பழக்கவழக்கங்களும், முதியோரை மதிக்காத எண்ணங்களும் தமிழ் இளைஞர்களிடையே தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கீழ்படியாத மாணவர்கள் முதியோரை சமூக தலைவர்களை மதிக்காத மனோநிலையுள்ள இளைஞர்கள் தற்போது ஊர் முழுவதும் காணமுடிகிறது. இதன் அடிப்படைகளை ஆராயும் போது போதைப்பொருள் பாவனைகள் தமிழ் இளைஞர்கள் மத்தியில் என்றுமில்லாத அளவு கூடியுள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள மதுபான சாலைகளில் வருமானம்மிக அதிகரிக் கப்பட்டுள்ளதாக வார் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்

2009 மே 18க்கு முன்னம் வடக்கு கிழக்கு தாயகப்பகுதியில் மதுபானசாலைகள் குறைவாகவே காணப்பட்டது முள்ளி வாய்க்காலில் போர் மௌனித்ததன்பின்னர் பல மதுபானசாலைகள் வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதுவும் ஏற்கனவே விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டு பகுதிகளில் மதுபான சாலைகள் இருக்கவில்லை தற்போது ஏற்கனவே விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டு பிரதே சங்களாக இருந்த இடங்களில் எல்லாம் பல மதுபான சாலைகள் திறக்கப்பட்டுள்ளதை காணலாம். இதுவும் ஒருவகையில் தமிழ் இளைஞர்களை தமிழ்தேசிய சிந்தனையில் இருந்து திசைமாற்றுவதற்காக அரசினால் முன்னெடுக்கும் நடவடிக்கை என்பதே உண்மை.

சட்டரீதியான மதுபான சாலைகளில் ஒருபக்கம் மதுபானம் விற்பனை உயர்ந்துள்ள அதே வேளை சட்டவிரோதம் அற்ற வடிசாராயம் காச்சும் பழக்கம் மிக அதிகமாக காணப்படுகிறது இது ஒருவகை சுயதொழில் போன்று குடும்பம் குடும்பமாக இரகசியமாக வடிசாராய உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட் டத்தில் பல கிராமங்களில் இது சர்வ சாதாரணமாக இடம்பெறுகிறது இதனை தடுக்க ஊர் சமூக பொது அமைப்புகள் முயற்சிமேற்கொண்டாலும் அதனை பூரணமாக தடுக்க முடியவில்லை இதற்கு காரணம் அந்தந்த பகுதி காவல்துறையினரும் இதற்கு உறுதுணையாக இருப்பதாகவும் அவர்களுக்கும் கசிப்பு உற்பத்தியாளர்கள் ஒரு தொகைபணத்தை நன்கொடையாக வழங்கு கின்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

மட்டக்களப்பில் ஒரு கிராமத்தில் நடந்த உண்மை இது (ஊரின் பெயரை குறிப்பிடவில்லை) அந்த ஊரில் பரவலாக பலர் கசிப்பில் அன்றாட தொழிலாக செய்வதை அறிந்த அந்த ஊர் கிராமவாசி ஒருவர் பொலிசாருக்கு முறையிட்டு வந்தார் பொலிசாரும் நடவடிக்கை பெரிய அளவில் எடுப்பதாக இல்லை இதனை அறிந்த அந்த கிராமவாசி சம்மந்தப்பட்ட பொலிஷ் பொறுப்பதிகாரியிடம் நேரில் சென்று கசிப்பு காச்சும் நபர்களின் பெயர் பட்டியலை வழங்கினார்.

சிலநாட்களால் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு சென்ற கசிப்பு களவில் காச்சும் நபர்கள் பலர் சென்று அந்த கிராமவாசியை ஊரைவிட்டு துரத்தினர் அவர் அந்த கிராமத்தில் வாழமுடியாமல் வேறொரு கிராமத்தில் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து வாழும் நிலை மட்டக்களப்பு தமிழ் கிராமம் ஒன்றில் ஏற்பட்டதாக என்னிடம் அந்த ஊர் பாடசாலை அதிபர் மனவருத்தத்துடன் கூறினார் இது கதையல்ல உண்மை.

சில இடங்களில் மட்டக்களப்பு மாவட் டத்தில் கசிப்பு காச்சுவோர் ஒரு அமைப் பாக(சங்கமாக) செயல்படுவதையும் அவ தானிக்கமுடிகிறது கசிப்பு (வடிசாராயம்) விலைகளை இவர்களே தீர்மானப்பதாகவும் கசிப்பை ஏனைய இடங்களுக்கு எடுத்து சென்று இரகசியமாக விற்பனை செய்வதையும் கசிப்பு கொண்டு செல்லும்போது அவர்களுக்கு பொலிசார் ஏதும் இடங்களில் நின்றால் அதை தெரியப்படுத்த சில இளைஞர்களுக்கு தொலைபேசி வசதிகளையும் கசிப்பு உற்பத்தி யாளர்கள் செய்து கொடுத்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஒவ்வொரு ஆண்டும் யூன் 26ம் தேதி உலக போதைப் பொருள் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றன. உலகம் முழு வதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை 25 கோடிப் பேர் போதைப் பொருட்களுக்கு அடிமையாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மது மற்றும் புகையிலைப் பொருட்களை உபயோகிப்பது சர்வ சாதாரணமாகிவிட்ட நிலையில், கஞ்சா, அபின், கோகைன், பிரவுன்சுகர் ஆகியவை கரையான் புற்று போல் இளைஞர் சமூகத்தை அழித்து வருகின்றன. கட்டுக்கோப்பான உடலை வைத்திருக்க வேண்டிய இளமைப் பருவத்தில், நரம்பு தளர்ந்து, உடல் சோர்ந்து போய்க் கிடக்கும் கொடுமையை என்னவென்று சொல்வது? தனி நபரின் உடல், மனம் இரண்டையும் சிதைப்பதுடன், சமூகத்திற்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கின்றன இந்த போதைப் பொருட்கள். இந்தப் பழக்கத்திலிருந்து மீளவே முடியாது என்ற சூழலில் தற்கொலைகளில் போய் முடிகின்றன.

உலகளாவிய ரீதியில் போதைப் பொருள் பயன்படுத்தல், போதைப் பொருள் கடத்தல், போதைப் பொருள் விற்பனை செய்தல் என்பன ஒரு முக்கிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது. போதைப் பொருளைக் கட்டுப்படுத்த அரசுகள் பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. போதைப் பொருள்கடத்தலுக்காக சில அரசுகள் மரண தண்டனையைக்கூடச் சட்டமாகப் பிரயோகித்து வருகின்றது. எத்தகைய நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும்கூட, போதைப்பொருளை முற்றாக ஒழித்துவிட முடியவில்லை. போதைப் பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமை களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட தினமாகவே உலக போதைப் பொருள் ஒழிப்பு தினம் காணப்படுகிறது.

போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்காக பேரணிகளையும், பதாதைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் விழிப்புணர்வாக மேற்கொண்டாலும் இதனை முற்றாக தடுக்க முடியவில்லை "தவளையும் கத்தும் மழையும் பேயும்" என்ற நிலையில்தான் போதை ஒழிப்பு பற்றி எதனை முன்னெடுத்தாலும் பூரணமாக அதை தடுக்க முடியவில்லை.

கடந்த 2009,மே,18, தொடக்கம் 2023, மே,18 வரையான 14, வருடங்களை அவதானித்தால் இலங்கையில் அதிகூடிய போதைப் பொருள் பாவனையும் அதேவேளை போதைப் பொருள்களை சட்டவிரோதமாக கடத்தப்பட்டவர்களை கைது செய்த செய்திகளையும் காண முடிந்தது.

குறிப்பாக வடக்கு கிழக்கு தாயகத்தில் தமிழ் இளைஞர்கள் இடையே போதைப்பொருள் பாவனைகளும், வாள் வெட்டு குழுக்களும், மாணவர்களிடையே ஒழுக்கச்சீர்கேடுகளும், தற்கொலை முயற்சிகளும் என்றும் இல்லாத அளவு அதிகரிக்கப்பட்டுள்ள பரிதாபகர நிலைமையை அவதானிக்க முடிகிறது.

ஈழவிடுதலைக்கான ஆயுதப்போராட்டம் தமிழீழத்தை பெற்றுத்தரவில்லை, சுயநிர்ணயம் சுதந்திரத்தை ஏற்படுத்தவில்லை. அரசியல் தீர்வை பெறவில்லை என்பதெல்லாம் உண்மைதான் ஆனால் ஈழவிடுதலை போராட்டகாலத்தில் தமிழ் மாணவர்கள், தமிழ் இளைஞர்கள், ஏன் பொதுமக்கள் மத்தியில் சிறந்த நல் ஒழுக்கமும் அற்பணிப்பான சிந்தனையும், ஒற்றுமையும் மேலோங்கி இருந்தது அது கடந்த 14, ஆண்டுகளாக

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# புறக்கணிப்பு கூடாது

துரைசாமி நடராஜா

இலங்கையர்களின் பொருளாதார நெருக்கடி அண்மைக்காலமாக உக்கிரமடைந்துள்ள நிலையில் மலையக மக்கள் இதனால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றமை தெரிந்த விடயமாகும்.எனவே இதனை கருத்தில் கொண்டு இம்மக்களின் பொருளாதார மேம்பாடு கருதி நிவாரண உதவிகளை அரசாங்கம் விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.என்றபோதும் இதன் சாதக விளைவுகள் குறைவாகவே காணப்படுகின்றன.இதனிடையே உலக வங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள “அஸ்வெசும” நிவாரணத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை உரியவாறு உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மலையக அரசியல்வாதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கை அண்மைக்காலமாக பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றது.கடன்சுமை நாட்டின் குரல்வளையை நெரித்துவரும் நிலையில் இதிலிருந்தும் மீள்வதற்கு இலங்கை பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகின்றது.சர்வதேச நாணய நிதியம் மற்றும் சில உலக நாடுகள் இலங்கைக்கு பொருளாதார ரீதியான உதவிகளை வழங்கி கைதூக்கி விடுவதற்கு முயன்று வருகின்றன. என்றபோதும் இலங்கையின் நிலைமைகள் அவ்வளவு விரைவாக சீரடைவதாக இல்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடி பல்வேறு தாக்க விளைவுகளையும் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.உணவுக்கான போராட்டத்துக்கு மத்தியில் பிள்ளைகளின் செலவுகளை சமாளிக்க முடியாமல் பெற்றோர் பலர் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் கடந்த காலங்களைக் காட்டிலும் அதிகரித்து காணப்படுவதாக கல்வித் தரப்பினர் கருத்து தெரிவிக்கின்றனர்.நாட்டில் உள நோயாளர்களின் தொகை 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.மேலும் மருந்துக் கொள்வனவுகளும் அதிகரித்துள்ளன. இளைஞர் யுவதிகளிடையே விரக்தியான ஒரு போக்கு காணப்படுகின்றது.இந்நாட்டில் இருப்பதில் பயனில்லை என்று சில இளைஞர்கள் வெளிநாட்டிற்கு செல்வதற்கும் தலைப்பட்டுள்ளனர்.வேலை வாய்ப்புக்களும் மந்தமடைந்துள்ளன.பொருளாதார சிக்கலால் குடும்ப உறவுகளிலும் விரிசல் நிலை ஏற்பட்டு வருகின்றது.கோபமடையும் சந்தர்ப்பங்கள் மக்களிடையே அதிகமாக காணப்படும் நிலையில் கோபத்தை வெளிப்படுத்த இவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### நேரொத்த நடவடிக்கைகள்

ஏனையசமூகங்களுடன்ஒப்பிடுமிடத்துமலையக சமூகத்தினர் பெரும்பாலான துறைகளில் மிகவும் பின்னடைவான நிலைமைகளைக் கொண்டுள்ளனர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.அத்தோடு அவர்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். இலங்கையில் அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் பல்பரிமாணம் உடையவையாகக் காணப்படுகின்றன.குறிப்பாக சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் பெருந்தோட்டங்களில் பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்கள் நாளாந்தம் பல்வேறு வடிவங்களிலான ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். என்று ஏற்கனவே ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கையாளர் சுட்டிக்காட்டி இருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.மலையக மக்களின் பின்தங்கிய வெளிப்பாடுகள் அதிகமுள்ள நிலையில் இதனைச் சீர்செய்வதற்கு விசேட ஏற்பாடுகள் அல்லது நேரொத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது புத்திஜீவிகளின் கருத்தாகவுள்ளது. இந்தியா சுதந்திமடைந்ததன் பின்னர் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டது.இந்த யாப்பினூடாக பின்தங்கியமக்களைசமத்துவநிலைக்குகொண்டு வரக்கூடிய விதிகள் உள்ளீர்க்கப்பட்டன.சாதி அடிப்படையில் பின்தள்ளப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் (பழங்குடிகள்) மக்களுக்கும் இத்தகைய யாப்பு விதிகள் தோள்கொடுத்தன. அத்தோடு “இந்தியா ஒரு இறைமையுள்ள, சமதர்ம, மதச்சார்பற்ற, சனநாயகக் குடியரசாகும். இது நாட்டின் சகல பிரசைகளின் நீதியையும் சுதந்திரத்தையும் சமத்துவம் மற்றும் தோழமையையும் பாதுகாக்கும் “ என்று யாப்பு ஐக்கியத்துக்கும் வலுசேர்த்தது.



ஐக்கிய அமெரிக்கா சுதந்திர பிரகடனம் செய்து யாப்பையும் உரிமைகள் பட்டத்தையும் பிரகடனப்படுத்தியபோது வரலாற்று ரீதியாக அடிமைத்தனத்துக்கு ஆளாகியிருந்த கறுப்பின மக்களுக்கு இத்தகைய விசேட விதிகள் அறிமுகமாகின.இத்தகைய ஏற்பாடுகளே நேரொத்த நடவடிக்கைகள் எனப்படுகின்றன. இன்று உலகளாவிய ரீதியில் பல நாடுகள் இத்தகைய ஏற்பாடுகளை தங்கள் நாட்டு யாப்புகளில் சேர்த்துக் கொண்டுள்ளன.பிரித்தானியா, பிரேசில், கனடா, ஜேர்மனி, ஜப்பான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் இதனை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளன என்று முன்னால் இந்து கலாசார அமைச்சர் பி.பி.தேவராஜ் தனது கட்டுரையொன்றில் வலியுறுத்தியுள்ளார். பின்தங்கிய மக்களின் அபிவிருத்தி கருதி வழங்கப்படும் நேரொத்த நடவடிக்கைகள் அம்மக்கள் சகல துறைகளிலும் குறித்த இலக்கினை அடையும் வரை வழங்கப்படுதல் வேண்டும் என்றும் சிலர் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் இலங்கையைப் பொறுத்தவரையில் மலையக மக்கள் பின்தங்கிய வெளிப்பாடுகளைக் கொண்டிருந்தபோதும் யாப்பு ரீதியாக அவர்களுக்கான நேரொத்த நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது தெரிந்ததேயாகும்.இதேவேளை அரசாங்கம் தேசிய ரீதியில் முன்னெடுக்கும் வறுமை ஒழிப்பு , சுகாதார, கல்வி மற்றும் தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட அனைத்திலும் மலையக மக்கள் பின்தள்ளப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது. இம்மக்களுக்கான வீடமைப்பு நிலைமைகளிலும் இந்த நிலையே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.வெறுமனே இம்மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும் கவர்ச்சியான வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றதே தவிர ஆனபயன் எதுவுமில்லை.

இலங்கையில் வறுமை நிலையை நோக்குகையில் பெருந்தோட்ட வறுமை நிலையே அதிகமாக காணப்படுகின்றது.1990/91 இல் 20.5, 1995/96 இல் 38.4, 2002 இல் 30.0, 2006/07 இல் 32.0, 2009/10 இல் 9.2 என்றவாறு வறுமை வீதம் அமைந்திருந்தது.இப்புள்ளிவிபரங்களின் நம்பகத்தன்மை தொடர்பில் சந்தேகம் வெளியிட்டிருந்த சிலர் இவ்வீதங்கள் இன்னும் அதிகமிருக்கலாம் என்றும் தெரிவித்திருந்தனர். சிசு மரண வீதம், போஷணைக்குறைபாடு, வயதுக்கேற்ற நிறையின்மை போன்ற பல நிலைமைகள் மலையகத்தில் அதிகமுள்ளன.இந்நிலையில் வறுமை நிவாரணங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை மலையக மக்களுக்குள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

### அநீதியான செயல்

இந்நிலையில் இலங்கையில் அமுல்படுத்தப்படும் ஜனசவிய, சமுர்த்தி உள்ளிட்ட வறுமை ஒழிப்பு திட்டங்களில் மலையக மக்கள் உரியவாறு உள்ளீர்க்கப்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும். கொரோனா காலத்தில் நாட்டின் சகல துறைகளும் ஸ்தம்பித்த நிலையில் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை மட்டுமே இயங்கி நாட்டின் அபிவிருத்திக்கு பங்காற்றியது.இக்காலத்தில் கூட அரச அல்லது தனியார் உதவிகள் மலையக மக்களுக்கு உரியவாறு கிடைக்கவில்லை. பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே அவர்கள் தமது ஜீவனோபாயத்தை கொண்டு நடாத்தினார்.ஆனாலும் கிராமப்புற மக்களுக்கு பல தரப்பினரிடமிருந்தும் உதவிகள் குவிந்த வண்ணமிருந்தன.இந்நிலை யில் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்களில் இனியும் மலையக மக்கள் புறக்கணிக்கப்படலாகாது என்ற கருத்தினை மலையக அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இதனடிப்படையில் உலக வங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கத்தால் “அஸ்வெசும” நிவாரணத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது.இத்திட்டத்தில் வறுமையில் அல்லல்படும் மலையக மக்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் முறையாக சேகரிக்கப்படவில்லை என்றும், தகவல்களை சேகரிக்க சென்றவர்களில் அநேகமானவர்கள் எந்தவிதமான அனுபவமும் இல்லாதவர்கள். அவர்களுக்கு பயனாளிகளை தெரிவுசெய்யும் நடைமுறை தெரியவில்லை என்றும் விமர்சனங்கள் இருந்து வருகின்றன.இது உண்மையாயின் இதன்மூலம் பாதிக்கப்படுபவர்கள் பெருந்தோட்ட மக்களேயாவர்.இது ஒரு அநீதியான செயலாகும் என்பதை கருத்தில் கொண்டு உரிய பயனாளிகளை தெரிவு செய்வதில் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். பயனாளிகள் தெரிவின்போது தொழிற்சங்க ஆதிக்கம் செல்வாக்கு செலுத்துமானால் அது உரிய பயனாளிகளைத் தெரிவு செய்வதில் இடையூறுகளை ஏற்படுத்தும் என்பதையும் மறுப்பதற்கில்லை.எனவே பயனாளிகள் தெரிவானது சுதந்திரமாக இடம்பெறுதல் மிகவும் அவசியமாகும்.

இதனிடையே பயனாளிகள் தெரிவில் குளறுபடிகள்காணப்படுவதாககூறப்படும்குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அமைச்சர் ஜீவன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# ஏற்கப்படாத ஏதிலி ஏக்கம்

பேராசிரியர். முனைவர் **ஆ. குழந்தை** (தமிழ்நாடு)

ஏதிலிகள் மனிதர்கள் என்றும்,அவர்களது உரிமைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் உலக நாடுகளின் கவனத்திற்கு கொண்டு செல்வது பொருத்தமற்ற செயலென்று கருதவேண்டாம். - திருத்தந்தை 23 ஆம் யோவான்

போராலும் அரச பயங்கரவாதத்தாலும் ஒவ்வொரு நிமிடமும் 20 மனிதர்கள் ஏதிலிகளாக மாற்றப்படுகின்றனர். இதை மறந்துவிடாமலிருக்க சூன் 20 ஆம் நாளை ஐக்கிய நாடுகளின் ஏதிலி அவை ‘உலக ஏதிலி நாள்’ என்று அறிவித்தது. இந்த நாள் உலக எதிலிகளின் அவலநிலையைப்பற்றிய நமது புரிதலையும் பரிவையும் மேம்படுத்த பயன்படுகின்றது. அவர்களது வாழ்வை மீட்டெடுக்க அவர்களிடமுள்ள மனஉறுதியை நாம் ஏற்பதற்கு வாய்ப்பு தருகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஏதிலிகளின் ஏக்கத்தை ஏற்கவேண்டுமென்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஏதிலிகளின் உரிமைகளையும், தேவைகளையும், நம்பிக்கைகளையும், அரசியல் விருப்புறுதியையும், பாதுகாப்பையும் நாம் ஏற்கவேண்டும். அவற்றை தருவதற்கான வழிமுறைகளையும் வளங்களையும் பெற உழைக்கத் தூண்டும் நாளாக இந்த ஏதிலி நாள் உள்ளது.

ஏதிலிகளின் அவலநிலையை உலகறிய எடுத்துரைத்து, விழிப்புணர்வு தந்து, பாதுகாப்பாக தஞ்சமடைந்த நாட்டில் வாழவும், அல்லது தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்லவும், உழைக்கும் கடமை ஒவ்வொரு மனிதனுக்கு இருக்கிறதென நினைவூட்டும் நாளாக இந்த ஏதிலி நாள் உள்ளது.
2023 ஆம் ஆண்டின் ஏதிலி நாளின் மையக்கருத்து

உள்வாங்குதல்(Inclusion) என்பதாகும். பிற நாடுகளிலிருந்து வரும் ஏதிலிகளை தஞ்சம் தரும் நாடுகள் அவர்களை வரவேற்று, அடைக்கலம், உரிமைகள் போன்றவற்றை தந்து தங்களது நாடுகளின் வளர்ச்சிக்கு உதவும் ஆற்றல்களாக அவர்களை மாற்றவேண்டும் என்பதுதான் உள்வாங்குதலாகும். எவராது எங்களை ஏற்றுக்கொள்வார்களா? பாதுகாப்பு தருவார்களா? உயிர் வாழ உரிமை தருவார்களா? என்ற ஏக்கப்பெருமூச்சு எவரது செவிகளிலும் விழவில்லை.

இந்த உள்வாங்குதல் பல நாடுகளில் விரும்பி நடைபெறுகின்றது. சில நாடுகளில் கட்டாயத்தின் பெயரில் நடைபெறுகிறது. சில நாடுகள் உள்வாங்காமல் துரத்தி அடிக்கின்றனர்.

இந்திய ஒன்றியம் போன்ற உலக நாடுகள் ஏற்கின்றன. இந்தியாவில் உள்ள ஏதிலிகளின் எண்ணிக்கையை பின்வருமாறு காண்போம். ஈழத்தமிழர்கள் 92015, திபெத்தியர்கள் 72291, மியான்மரிலிருந்து 30308, ஆப்கானிசுதானியர்கள் 14466, பிற நாடுகளிலிருந்து வந்த 4653 ஏதிலிகள் இந்திய ஒன்றியத்தில் வாழ்கின்றனர் (ஆதாரம்: (India Factsheet- April 2023. Cfr. Refugees and Asylum-seekers as of 30 April 2023). 2022 ஆம் ஆண்டில் மட்டும் 10.84 கோடி மக்கள் துன்புறுத்துதல், மோதல்கள், வன்முறை, மனித உரிமை மீறல்கள், பொது ஒழுங்கை கடுமையாக சீர்குலைக்கும் நிகழ்வுகள் போன்றவற்றால் பலவந்தமாக பிடுங்கி எறியப்பட்டனர்.

ஏதிலிகளின் தீர்வின் அவசியம் என்ற மற்றொருகருத்தையும்இந்தநாள்வலியுறுத்துகிறது. ஏதிலிகளின் பிரச்சினையை தீர்க்க எந்த அரசும் தயாராக இல்லை. ஈழத்தமிழர்களைப்போன்று பல ஏதிலிகளை 30 ஆண்டுகளாக முகாம்களில் வாழ வைப்பது மனித இனத்திற்கு எதிரான குற்றமாகும். பிடுங்கி எறியப்பட்ட மக்கள் 2021 ஆம் ஆண்டைவிட 2022 ஆம் ஆண்டில் 1.9 கோடி மக்கள் அதிகரித்துள்ளனர். இந்த10.84கோடி ஏதிலிகளில்7.11 கோடி மக்கள் தங்களது சொந்த நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். மொத்த ஏதிலிகளில் 52 விழுக்காடு ஏதிலிகள் சிரியாவிலிருந்தும்(65 இலக்கம்(இலட்சம்), உக்ரைனிலிருந்தும் (57 இலக்கம்), ஆப்கானிசுதானிலிருந்தும் (57 இலக்கம்) வருகின்றனர்.

இந்த ஏதிலிகளின் எண்ணிக்கையை குறைக்காமல் அதிகரிக்க, அறிவு, அதிகாரம், நாகரீகம், முதிர்ச்சி போன்றவற்றை படைத்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்ற அரசுகள், ஆளும் வர்க்கங்கள் செயல்படுகின்றன. ஏதிலிகளை உருவாக்குவது காட்டுமிராண்டித்தனமாகும். முதிர்ச்சியற்ற செயலாகும். பண்பற்ற குமுகத்தின் அரக் கத்தனமாகும்.



ஒரு பக்கம் ஏதிலிகளை அதிகரிக்கின்றனர். மற்றொரு பக்கம் ஏதிலிகளை ஏற்றுக்கொண்ட நாடுகள் அவர்களை மீண்டும் அவர்களது தாய் நாட்டிற்கு அனுப்பி வளமாக வாழ வழிகாட்டுவதில்லை. 2022 ஆம் ஆண்டு 32 மில்லியன் ஏதிலிகளில் 2, 04, 500 ஏதிலிகள் மட்டும் மீண்டும் அவர்களது தாய்நாட்டிற்கு அனுப்பியுள்ளனர்.

உள்நாட்டு அரசியல் தாக்கத்தாலும் பிற பிரச்சினையாலும் ஏதிலிகளை ஏற்றுக்கொண்ட அரசுகள் தங்களது நாட்டில் குடியுரிமை கொடுத்து ஏதிலிச் சிக்கலை தீர்க்க எவ்வித நடவடிக்கையை எடுக்க முன்வருவதில்லை.

சட்டரீதியான பாதுகாப்பு இல்லாமல் வாழும் ஏதிலிகளின் நலவாழ்வும் வாழ்வாதாரங்களும் மிகவும் ஆபத்தானவை, அழிந்துவிடக்கூடியவையாகும். அடைக்கலம் தந்த அரசுகள் தங்களது குடிமக்களின் உரிமைகளை மட்டும் கவனத்தில் கொண்டுள்ளன.

அடித்தள, நடுத்தள பொருளாதாரம் உள்ள நாடுகள் நிரந்தர குடியுரிமை வழங்க தயாராக இல்லை. துருக்கியில் சிரியா ஏதிலிகள், தமிழ்நாட்டில் ஈழத்தமிழ் ஏதிலிகள், பாகிசுதானில் ஆப்கானிசுதான் ஏதிலிகள். கென்யாவில் சோமாலியா ஏதிலிகள் எவ்வித சட்ட பாதுகாப்பில்லாமால் வாழ்கின்றனர். ஏதிலி சிக்கலை தீர்க்க பன்னாட்டு நிதி குறைந்து கொண்டே செல்கின்றது.

இந்த நாடுகளில் ஏதிலிகள் சட்டரீதியான வேலைகளை செய்ய முடியாமல் அமைப்புசாரா தொழில்களை செய்கின்றனர். இந்த வேலைகளை தேடுவதில் போட்டி வருவதால் மனஇறுக்கம் ஏதிலிகளை ஆட்டிப்படைக்கிறது. ஏதிலிகளின் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு எடுக்காமல் இருந்தால் எதிர்கால வாழ்வை தீர்மானிக்க முடியாமல் திணறுகின்றனர்.

தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் நாடற்ற மலையக தமிழர்களும், குடியுரிமையற்ற ஈழத்தமிர்களும் நிரந்தர குடியுரிமை கேட்டு 30 ஆண்டுகளாக போராடி வருகின்றனர். ஆனால் குடியுரிமை தர மறுக்கின்றனர். குடியுரிமையற்ற மக்கள் அடிமைகளாகவும், சார்புநிலையில் வாழ்பவர்களாகவும், எதிர்காலத்தையும்வாழ்விடத்தையும் முடிவுசெய்ய இயலாதவர்களாகவும், அவர்களது ஆக்காற்றலை இழந்தவர்களாகவும் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் குறுகிய வீடுகள்(10க்கு 8 அளவில்), திறந்தவெளி கழிப்பிடம், குளங்கள், உணவு தானிய கிடங்குகள், தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வசதியில்லாத இடங்கள், காட்டுப்பகுதிகள் போன்ற இடங்களில் முகாம்கள் உள்ளன. வேலையின்மை, மருத்துவ வசதியின்மை, கல்வியின்மை போன்ற ஆற்றல்படுத்தும் கூறுகள் அதிகம் இல்லை. வாழ்வாதாரமற்ற, போராட உரிமையற்ற, இயக்கங்களை உருவாக்கும் உரிமையற்ற வாழ்வில் ஏதிலிகள் அரசு அதிகாரிகளையும் தொண்டு நிறுவனங்களையும் சார்ந்து வாழும் நிலை உள்ளது. பண்பாடு சீரழிந்து, தங்களது எதிர்கால வாழ்வை இழந்து வாழ்கின்றனர்.

இந்த அவலங்கள் ஆட்சியாளர்களின் கண்களில் படவில்லை. அவர்களது அழுகுரல் ஆட்சியாளர்களின் செவிகளில் கேட்கவில்லை. சில நேரங்களில் இவற்றை பார்த்து. கேட்டு அமைதியாகிவிடுகின்றனர். இரக்கமற்ற இதயங்கள் இருக்கும்வரை ஏதிலிகள் அதிகரிப்பர். கேட்டும் கேட்காதுபோல நடிப்பவர்கள் நடமாடும் வரை நாடற்றவர்கள் உருவாக்கப்படுவர். தன்னலத்திற்காக உரிமைகளை பறிக்கும் ஆட்சியாளர்கள் ஆளும்வரை ஏதுமற்ற ஏதிலிகள் எங்கும் அலைவர்.

ஏற்கப்படாத ஏதிலிகள் எத்தனிக்கும் போது, எந்த நாடும் ஏற்றம் பெறாது. மனசாட்சியை மழுங்கடிக்காமல் மறுமலர்ச்சி பெற்று இயற்-மானிட உலகிற்கு உழைப்போம். ஏதிலியற்ற உலகை உருவாக்குவோம். அப்போது பகுத்தறிவாதிகள் வாழும் பாருலகத்தை படைக்க முடியும்.

• • •

## மனித புதைகுழி ... தொடர்ச்சி ...

தகவல்கள் படைத்துறையைச் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்டதையடுத்து அதிகாரிகள் மீது ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாகவே, இற்றை வரை நடந்த பெரும்பாலான அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அகழ்வுப் பணிகளிலிருந்த குறைபாடுகளை இவ்வறிக்கை ஆய்வு செய்வதுடன் மாத்தளைப் புதைகுழி மற்றும் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட இரு புதைகுழிகள்ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பாகவும் ஆராய்கின்றது.

மேலும் குறித்த அறிக்கையில் முக்கியமாக, 2013ம் ஆண்டு மாத்தளை மாவட்டத்தில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டபோது 5 வருடத்திற்கு மேற்பட்ட ஆவணங்களை அழிக்கும் படி கோட்டாபய காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்படுகின்றது.

அத்தோடு இந்த அறிக்கை, கோட்டாபயவுக்கு எதிராகவும் இதில் சம்மந்தப்பட்ட உயர் காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது.

இந்த மனித புதைகுழிகள் தோண்டி எடுப்பது எப்படி, பாதுகாப்பது எப்படி, அடையாளம் காண்பது எப்படி விசாரணை செய்வது எப்படி என்பவை தொடர்பாக விஷேட சட்டங்கள் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறித்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இராஜதந்திரத்தில் பெண்களுக்கான சர்வதேச நாள்

# இத்துறையில் ஆண்களின் ஆதிக்கமே அதிகம்

கலைச்செல்வி சரவணன், ஊடகவியலாளர்

**இராஜதந்திரிகளாக ஏன் பெண்கள் அதிகளவில் உலகில் இல்லை என்று நினைக்கின்றீர்கள்? இதற்கு ஆண் ஆதிக்கம் காரணமாகுமா?**

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 24 ஆம் நாள் அன்று 'இராஜதந்திரத்தில் பெண்களுக்கான சர்வதேச தினமாக' குறிக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. எதற்கு இந்நாளை கொண்டாட வேண்டும்? இதன் முக்கியத்துவம் என்ன? அதுவும் பெண்களுக்கான முக்கியத்துவம் கொடுக்கப் படுவது ஏன்? போன்ற பல கேள்விகள் நம் மனதில் தோன்றும்.ஆனால், இந்நாளை அவ்வளவு சுலபமாக யாரும் கடந்து சென்று விட முடியாது.

**முக்கியத்துவம் ஏன்?**

உலகில் முடியாட்சி வீழ்ந்து ஜனநாயக முறை தோன்றியவுடன், இராஜதந்திர உறவுகளின் தேவை அதிகமானது. ஏனெனில், அது ஜனநாயகத்தை நீர்த்துப் போகாமல் செய் வதற்கான கருவியாக இருந்தது. உலக நாடுகளை ஒன்றிணைக்கவும், இணக்கமாக வைத்திருக்கவும் இராஜதந்திரிகளின் தேவையும் இருக்கிறது. யார் இந்த இராஜதந்திரிகள்? அயல்நாட்டு தூதுவர் களாகவும், வெளியுறவுத்துறை செயலாளர்களா கவும், மந்திரிகளாகவும் இருப்பவர்கள். அந்தந்த நாடுகளின் உரிமைகளுக்காகம், மக்களுக்காகவும் குரல் கொடுப்பவர்கள்.

**பணியாற்றும் பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?**

ஆண்களைக் காட்டிலும் இத்துறைகளில் பணிபுரியும் பெண்கள் குறைவாகவே உள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் 28% என்ற அளவிலும், கனடாவில் 51%,அமெரிக்காவில் 41% பேர் இருக்கிறார்கள். ஆப்பிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளில் முறையே 20.54%,18%,12%,10% பேர் இராஜ தந்திரி களாக பணிபுரிகிறார்கள்.

**ஏன் இந்த வேறுபாடு? ஆணாதிக்கம் காரணமா?**

பெண்கள் இத்துறையில் பணிபுரிய குடும்ப ஒத்துழைப்பும், சமூக அரவணைப்பும் தேவை என்பதே நிதர்சனம்.உண்மையில் ஆண் களை விட பெண்களே இராஜதந்திரத்தில் கைதேர்ந்தவர்கள். எப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையையும் பக்குவமாக கையாள தெரிந் தவர்கள். நம் குடும்பங்களில் கூட பெண்களே பிரதானமானவர்களாக இருப்பர்.உறவுகளிடம் நல்லுறவை பேணுவது,பொருளாதார சிக்கல் களைக் கையாளுவது,தீர்க்கமாக முடிவெடுப்பது என பெண்களின் கைகளே ஓங்கியிருக்கும் சரியான நேரத்தில் ஆக்ரோஷத்தையும் காட்டுவதில் வல் லவர்கள்.

ஐக்கிய நாடுகளுக்கான இந்தியாவின் முதல் செயலாளர் சினேகா துபேயின் சீற்றம் நிறைந்த பேச்சை இந்நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான், உலக அரங்கில் காஷ்மீர் பிரச்சனையை தவறாக குறிப்பிட்டபோது, அந்த நாடு அதன் கொல்லைப்புறத்தில் பயங்கரவாதத்திற்கு ஆதர வளித்து வருகிறது என்று பதிலடி கொடுத்தார் சினேகா துபே.அந்த தன்னம்பிக்கையும், துணிச் சலும் பலரால் பாராட்டப்பட்டது.

கடந்த 2009 முதல் 2013 வரை ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கீழ் 67 வது அமெரிக்க வெளி



யுறவுத்துறை செயலாளராக பணியாற்றிய ஹிலாரி கிளிண்டனின் கூக்குரல் பெண்களுக்கான பல கதவுகளை திறந்து விட்டதும் மறக்க முடி யாதது. மனித உரிமையையும்,பெண்களின் உரிமையையும் பிரித்துப் பார்க்க முடியாது என்று முழக்கமிட்டார். சுமார் 79 நாடுகளுக்கு பயணித்தவர் அவர்.

இப்போது நம் கேள்விக்கான பிரதான விடை கிடைத்து விட்டது என்று கூறலாம். பெரும் பாலும், இத்துறையில், திறமையின்அடிப்படையில் பாலின பாகுபாடு பார்ப்பதில்லை.

**பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என் னென்ன?**

இத்துறையில் பணியாற்றும்போது ,பல நாடுகளுக்கும் பயணம் செய்ய வேண்டி வரும். குடும்பம், குழந்தைகளைக் கவனிக்க இயலாது. குழந்தைகளின் கல்வியும் தடைபடும். இதே துறை யில் இருப்பவரை திருமணம் செய்தாலும், ஒரே நாட்டில், ஒரே இடத்தில் வேலை கிடைப்பது கடினம். எனவே, இத்துறையில் சேருவதற்கு பெண்கள் தயங்குகிறார்கள். ஒரே ஆண்டுக்குள் எங்கெல்லாம், எத்துணை முறை பணி மாற்றம் செய்தாலும் செல்வதற்கு தயாராக இருக்க வேண்டி வரும்.

அடுத்ததாக, பெண்களின் பாதுகாப்பும் ஒரு அம்சமாகப் பார்க்கப்படுகிறது. அனைத்து நாடுகளும் அமைதியான சூழ்நிலையில் இரு க்கும் என்று கருத முடியாது. ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், ஆப்பிரிக்கா போன்றவை எந்நேரமும் பதற்றம் ஏற்படக்கூடிய நிலையில் இருப்பவை. அப்போது, அங்கு பணிபுரிய ஆண்களுக்கு முன்னு ரிமை தரப்படுகிறது. இவற்றைக் கையாளுவதில் பெண்கள் சளைத்தவர்கள் இல்லை.ஆனால், இது போன்ற சமயங்களில் பாலின பாகுபாடும், சமூக பார்வையும் மாறுபடுகிறது என்பதை மறுப் பதற்கில்லை. .

**ஏன் இந்தியாவில் இந்திரா காந்திக்கு பின் ஒரு பெண்ணால் பிரதமராக முடிய வில்லை?**

இதை தனிப்பட்ட நபரின் திறமையாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. "இந்தியா என்றால் இந்திராகாந்தி " என்ற நிலையை உருவாக்கியதற்கு யார்காரணம்? அவரேதான். தடைகள்பலவந்தாலும் தகர்த்தெறிவது தான் ஒரு நல்ல ஆளுமைக்கு அடையாளம். அதுபோன்ற ஆளுமைகளை யாரும் தடுக்கவும் முடியாது. அழிக்கவும் முடியாது.

**"தந்திர நரி"யா இந்திராகாந்தி?**

அண்டை நாடான பாகிஸ்தானில், உள் நாட்டு கலவரம் ஏற்பட்டது. அப்போது, பத்து மில்லியன் அளவில் அகதிகளாக அந்நாட்டு மக்கள் இந்தியாவுக்கு வந்தனர். அவர்களின் பிரச்சனை யைத் தீர்க்க பாகிஸ்தான் மீது போர் அறிவித்தார். ஆனால், அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ரிச்சர்ட் நிக்சன், பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்ததுடன், இந்தியாவுக்கு எச்சரிக்கையும் விடுத்தார். ஆனால், இந்திராதான் இறுதியில் வெற்றி பெற்றார். மேலும், நட்புறவு மற்றும் ஒத்து ழைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டு உலக நாடுகளின் அரசியல் ஆதரவைப் பெற்றார். 1971-இல் வங்காள தேசமும் உருவானது. அப் போது, இந்திராவை ரிச்சர்ட் நிக்சன் "தந்திர நரி" என்று இரகசியமாகக் குறிப்பிட்டது பின்னாளில் வெளியானது.

இதுபோன்று, இலங்கையில் நின்று அமெரிக்கா தன் ஆதிக்கத்தை இந்தியா மேல் காட்டிட முனைந்தது. அப்போது, இராஜதந்திர முனைப்புடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கவும், உதவிடவும் முன் வந்தார் இந்திரா. இதன் மூலம், இந்தியாவின் கரங்களை உயர்த்த நினைத்தார். இப்படி பல விஷயங்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனால், அதற்குப் பின், பின்னாட்களில் அவரது மருமகளான சோனியா காந்தியை பிரதம ராக ஏற்றுக் கொள்ள அரசியல் களத்தில் எதிர்ப்பு வலுத்தது. மன்மோகன் சிங்கை முன் வைத்தே அவரால் இயங்க முடிந்தது. ஆனால், பத்து வருட காலம் எதிரிகளுக்கு விட்டுக் கொடுக்காமல் சாமர்த்தியமாக கட்சியை தன் கைப்பிடியிலேயே வைத்திருந்தார் சோனியா காந்தி.

ஒரு அரசியல் கட்சியை கட்டி ஆளவும், அதற்கான ஆதரவுகளை தக்க வைத்துக் கொள் வதும், இராஜதந்திர செயல்பாடுகள், பரந்த அறிவு போன்றவை மூலம் ஒருவர் பிரதமர் போன்ற பெரிய பதவிக்கு வரலாம். அது போன்ற ஒருவர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்பதே உண்மை. பிற்காலத்தில் நடக்க வாய்ப்புள்ளது என நம்புவோம்.

'இராஜதந்திரத்தில் பெண்களுக்கான சர்வ தேச தினம் 'மூலம், நிலையான வளர்ச்சி, அமைதி மற்றும் ஜனநாயகத்தை அடைய முடிவெடுக்கும் அனைத்து நிலைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களின் பங்கேற்பு இருப்பது அவசியம் என்பதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப் படுத் தியிருக்கிறது.

இன்று நம் நிலை உயர இந்த ராஜ தந்திரி களின் மதிநுட்பம் நிறைந்த இராஜதந்திரமே காரணம் என்றால் மிகையில்லை. இனி வரும் காலங்களில் தடைகளை உடைத்து, சமூக ஒத்து ழைப்புடனும், புரிதலுடனும் பெண் இராஜ தந்திரிகள் அதிக எண்ணிக்கையில் இத்துறைக்கு வரவேண்டும். ஜனநாயக வளர்ச்சி, அமைதி, நல்லுறவு, மனித மேம்பாடு போன்றவற்றில் கோலோச்ச வேண்டும் என்று நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

• • •




# மழைக்காடுகளை நிர்வகிக்க பூர்வீகக் குடிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் இந்தோனேசிய அரசு

தமிழில்: ஜெயந்திரன்

## இறுதிப் பகுதி

### பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்தியிருக்கிறது

மழைக்காடுகளை அங்கீகரிக்கும் செயற்பாடு, காலநிலை தொடர்பான அனுகூலங்களுக்கு அப்பால், வறுமையாலும் இனப் பாகுபாட்டினாலும் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள பூர்வீகக் குடிகளின் வாழ்வில், பாலின சமத்துவத்தையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகவும் அமைந்திருக்கிறது.



ஒகொணி இன மக்களின் நிலம், அரச காடு எனக் கருதப்பட்டதன் காரணத்தினால், அந்த இனமக்களுக்கு மேலோட்டமான விவசாயப் பயிற்சியும் ஆதரவும் வழங்கப்பட்டது. ஆனால் அதே நேரம் மனிதவளத்துக்கான அமைச்சும், போகோர் விவசாயப் பல்கலைக்கழகமும் இணைந்து *(Bogor Agricultural University)* , அவர்கள் மேற்கொள்ளும் பயிர்ச்செய்கைளின் தரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளை அந்த மக்களுக்கு தற்போது வழங்கிவருகின்றன. சுற்றுச் சூழல் உல்லாசத்துறையை *(ecotourism)* விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளும் தற்போது அங்கே தென்படுகின்றன.

“அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பொருண்மிய வளர்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவான ஒரு சூழல் தற்போது இங்கே உதயமாகி இருப்பதாக நான் நம்புகிறேன்” என்று பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் பீடத்தைச் சேர்ந்த றீனா மாடியானா *(Rina Mardiana)* தெரிவித்தார்.



ஒகொணிகளுக்குரிய காடுகள் உள்ளிட்ட, பூர்வீகக்குடிமக்களால் பாதுகாக்கப்படும் 5 காடுகள் தொடர்பாக கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு, உள்நாட்டு அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபடுவதற்கு இவ்வாறான செயற்பாடுகள் அதிகமாக உதவியிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறது.

பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தனித்துவமான குழுக்களை உருவாக்குவதன் மூலம் இந்தோனேசியத் தீபகற்பத்தின் மேற்கத்தைய தொங்கலில் இருக்கின்ற சுமத்திராத் தீவில் வாழ்கின்ற ஒரு பூர்வீகக்குடியைச் சேர்ந்த பெண்கள் காடுகளைப் பேணிபாதுகாக்கும் செயற்பாட்டில், பாலின சமத்துவத்தை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். ஆனால் இவ்வாறான ஒரு சூழல் பரவலாகக் காணப்படவில்லை. காட்டிலிருந்து பெறும் உற்பத்திப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கு பல சந்தர்ப்பங்களில் ஆண்களின் அனுமதி பெண்களுக்குத் தேவைப்படுகின்றது. “எடுத்துக்காட்டாகச் சொல்வதாயின் பெண்களது குரல்கள் இன்னும் முழுமையாகக் கேட்கப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும்” என்று இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய அபி கீனா பொவாங் மனாலு *(Abby Gina Boang Manalu)* தெரிவித்தார்.

தொடர்ந்து முன்னேறிச் செல்லவேண்டுமென்றால், மழைக்காடுகளை அங்கீகரிக்கும் செயற்பாட்டின் வேகத்தையும் அளவையும் அரசு கணிசமான அளவு அதிகரிக்க வேண்டும் என்று விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.



இந்தோனேசியாவின் ஓர் அரசசார்பற்ற நிறுவனமான மூதாதையர் உரித்துகளைப் பதிவு செய்யும் அமைப்பு *(Ancestral Domain Registration Agency)* வெளியிட்ட அறிக்கையின் படி *25.1* மில்லியன் ஹெக்ரேயர் *(96, 912* சதுர மைல்கள்*)* அளவான வழமையான மழைக்காடுகளில் *3.2* மில்லியன் ஹெக்ரேயர்களே *(12,366* சதுர மைல்கள்*)* அதாவது *12.7* வீதமான மழைக்காடுகளே இதுவரை உள்ளக அரசினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

“அது போதாது” என்று றொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் மானிடவியல் பேராசிரியராகப் பணிபுரிகின்றவரும் இந்தோனேசிய மக்கள் இயக்கங்கள் தொடர்பான நிபுணருமான ரானியா லீ *(Tania Li)* தெரிவித்தார். “தேவையான அளவு இந்த அங்கீகரிக்கும் செயற்பாடு நடைபெறவில்லை. இதுவரை செய்து முடிக்கப்படாமல் இருப்பவை செய்யப்படும் அளவுக்கு அவை விரைவாக நடைபெற வேண்டும்.”

பாப்புவா பிரதேசத்தில் பாம் எண்ணெய், மரக்குற்றிகள் வெட்டுதல், சுரங்கச்செயற் பாடுகள் போன்றவற்றுக்கென ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்ற பல மில்லியன் ஹெக்ரேயர்கள் மழைக்காடுகளை லீ சுட்டிக்காட்டினார். அங்கே நீண்ட காலமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் பிரிவினைப்போராட்டங்களின்காரணமாகபூர்வீகக் குடிமக்களின் நில உரிமைகள் ஒரு மிகச் சிக்கலான அரசியல் பின்புலத்தை எதிர்கொள்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

“இது ஒரு மிக முக்கிய நேரம்” என்று கூறினார் லீ. “உண்மையில் இந்தோனேசியா தங்களது காடுகளையும் பூர்வீகக் குடிகளையும் பாதுகாக்க விரும்புகிறதா? அல்லது அது இலாபத்தையும் அதிகாரத்தையும் தேடுகிறதா?”.

### புதிய நிதி உதவிகள்

ஒகொணி இனத்தைச் சார்ந்த பூர்வீகக் குடிகளுக்கு மழைக்காடுகளுக்கான அங்கீகாரம் கிடைத்த பின்னரும் கூட, சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. மரக்குற்றிகள் தயாரிக்கும் நிறுவனமான ‘பாஸ்கா’ *(PASKA)* தான் ஏற்கனவே உறுதிமொழி அளித்தது போல அந்தச் சமூகத்துக்கு வீடுகளையும் கிணறுகளையும் கட்டத் தவறியிருந்தது. இதன் காரணமாக, ஒகொணி இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் *2019* இல் அந்த நிறுவனத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். அந்த நிறுவனத்தின் உரிமம் காலாவதியானதன்காரணத்தினால் இப்போது அந்த நிறுவனம் அங்கு இயங்குவதில்லை. இருப்பினும் அதன் பாதிப்புகள் இன்னும் உணரப்படுகின்றன. “அங்கு தண்ணீர் சேறுமயமாக மாறிவிட்டது. அங்கு மீன்களைக் காண்பது அரிதாகிவிட்டது” என்று *29* வயதான ஜூலியானுஸ் ஒகொணி *(Julianus Ogoney)* தெரிவித்தார்.



இவ்விடயம் தொடர்பாக பாஸ்கா நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் எந்தவித கருத்தையும் தெரிவிக்க முன்வரவில்லை.

அங்கீகாரம் வழங்கும் செயற்பாட்டை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மீண்டும் செல்வந்தர்களை மூழ்கடித்த

# ரைற்றானிக் கப்பல்


ரைற்றானிக் கப்பலுக்கும் செல்வந்தர்களுக்கும் எதோவொரு தொடர்பு இருந்துகொண்டே இருக்கின்றது. 1912 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமெரிக்காவின் மசசூசெற் பகுதியில் இருந்து 1450 கி.மீ தொலைவில் ரைற்றானிக் கப்பல் மூழ்கிய போது அதில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் செல்வந்தர்கள். 1912 ஆம் ஆண்டு 2,224 பயணிகளுடன் புறப்பட்ட கப்பல் மூழ்கியதால் 1,500 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது அந்திலாந்திக் கடலில் 4,000 மீற்றர்கள் ஆழத்தில் மூழ்கிய இந்த கப்பலை பார்வையிடுவதற்காக சென்ற Titan எனப்படும் சிறிய நீர்மூழ்கிக் கப்பலில் சென்ற ஐந்து செல்வந்தர்கள் கப்பலுடன் காணாமல் போயுள்ளனர்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) இந்த கப்பல் பயணத்தை ஆரம்பித்தபோது அதில் பிரித்தானியாவை சேர்ந்த கோடீஸ்வரர் Hamish Harding(58), பிரித்தானியாவை சேர்ந்த செல்வந்தர் மற்றும் வர்த்தகர் Shahzada Dawood (48) மற்றும் அவரின் மகன் Suleman(19), ஓசன்கேற் எனப்படும் இந்த கப்பல் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் Stockton Rush(61) மற்றும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த Paul-Henri Nargeolet(77) ஆகியோர் அதில் பயணம் செய்தனர்.

ஸ்ரெக்ரென் றுஸ்ஸின் மனைவி வென்டி றுஸ் என்பவர் 1912 ஆம் ஆண்டு மூழ்கிய





ரைற்றானிக் கப்பலில் முதல் தர இருக்கையில் பயணம் செய்து உயிரிழந்த வர்த்தக தம்பதியினரின் பேரப்பிள்ளையாவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை(18) காணாமல் போன இந்த கப்பலை தேடி அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் கடற்படை விமானங்கள் மற்றும் கப்பல்களும், பிரித்தானியா உட்பட பல நாடுகளின் மீட்பு குழு நிபுணர்களும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை (22) கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 26,000 சதுர. கி.மீ பரப்பளவில் தேடுதல்கள் மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்காவின் கரையோர காவல் படையினர் தெரிவித்துள்ளனர்.

Titan submersible




சிறிய நீர்மூழ்கியில் இருக்கும் ஒக்சிசன் எனப்படும் உயிர்காப்பு வாயுவின் கால எல்லை கடந்த வியாழக்கிழமை பிரித்தானியா நேரம் 12 மணியுடன் முடிந்துவிடும் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அதாவது மீட்பு பணியினருக்கு மிகவும் சவாலான அமெரிக்கா, கனடா நேரமே.

ஒக்சிசன் அளவு குறையும்போது சுவாசிப்பவர்களின் இயக்கம் தாமதமாகுவதுடன், அவர்களின் செயல்திறனும் குறைந்துவிடும் எனவே மீட்பு பணியினருக்கான ஒத்துழைப்புகளை அவர்களால் வழங்க முடியாது. உதாரணமாக சமிக்ஞைகளுக்கான பதில்களை கூட அவர்களால் வழங்க முடியாது. இது மீட்புப்பணியை மேலும் தாமதமாக்கும்.

ரைற்றானிக் கப்பலுக்கு அண்மையாக செல்வதற்கு இரண்டு மணிநேரம் எடுக்கும் நிலையில் ஒரு மணிநேரம் 45 நிமிடங்களில் சிறிய கப்பலின் தொடர்பு அற்றுப்போயுள்ளது. 24 மணிநேரத்தில் தன்னிச்சையாகவே நீரின் மேற்பரப்புக்கு வரும் வகையில் இந்த கலம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது வரை வெளிவராததால் அது தன்னிச்சையாக வெளிவருவதுகடினம்எனதெரிவிக்கப்படுகின்றது. அதாவது இந்த பயணம் என்பது ஒரு தற்கொலை நடவடிக்கை என தெரிவித்துள்ளார் முன்னாள் பயணி.

நான் 2021 ஆம் ஆண்டு செல்லும் போது மின்சார பொறிமுறை தவறுகளால் பயணம் 5 மணிநேரம் தாமதமானது அப்போது எனக்கு மிகப்பெரும் பயம் தொற்றிக்கொண்டது. ஆனால் அதிஸ்ட்டவசமாக நாம் மேல் வந்துவிட்டோம் என ஜேர்மனியை சேர்ந்த Arthur Loibl(60) தெரிவித்துள்ளார்.



கடலுக்கடியில் மிகவும் குளிர் அதிகம், கலத்தில் வெப்பமாக்கிகள் உள்ளபோதும் அவை எவ்வளவு நேரம் தாக்குப்பிடிக்கும் என்பது சந்தேகமே. சூரிய ஒளி 1000 மீற்றர்களுக்கு அப்பால் ஊடுருவ முடியாது என்பதால் அங்கு மிகவும் இருளாக இருக்கும் அதாவது முகத்திற்கு அருகில்

## ஆர்.தீகன்

இருக்கும் உங்கள் கைகளையே நீங்கள் பார்க்க முடியாது.

நீர்மூழ்கிக் கப்பல்களே 300 மீற்றர் ஆழத்திற்கு கீழ் தான் பயணிப்பதால் நீர்மூழ்கிகளை கொண்டு மீட்பது என்பது இயலாத காரியம். ஆனால் ரைற்றானிக் மூழ்கியுள்ள 4,000 மீற்றர் ஆழத்திற்கு செல்லும் சிறிய கலங்கள் உள்ளன. கலம் கண்டறியப்பட்டால் அவற்றின் மூலம் சங்கிலிகளை பொருத்தி மீட்க முடியும்.

கடலின் அடித்தளம் சேறாக இருப்பதால் அதில் வீழ்ந்த கலத்தை மீட்பது கடினமானது. கடலின் அடித்தளம் எவ்வாறு இருக்கும் என கூறுவது கடினம் ஏனெனில் அது தொடர்பில் ஆய்வுகள் செய்யப்படவில்லை. அதாவது சந்திரனின் தரையை போன்றது. ஒரு வைக்கோல் போருக்குள் வீழ்ந்த ஊசியை தேடுவது போன்றதே இந்த தேடுதல்.



எனினும் கனேடிய வான்படையின் Boeing P-8 Poseidon விமானங்களும், அமெரிக்க வான்படையின் C-130 Hercules, C-17s விமானங்களும், இரு நாட்டு கடற்படை கப்பல்களும் தேடுதலை மேற்கொண்டு வருகின்றன. கலத்தில் இருந்து வெளிவரும் ஒலியை அவதானிப்பதற்காக வான்படை விமானங்கள் கடலுக்குள் சோனர் எனப்படும் ஒலிவாங்கிகளை போட்டு வருகின்றன. கடந்த புதன்கிழமை (21) புதிய ஒலிகளை கேட்டதாக அவர்கள் கூறியபோதும் கடலில் இயற்கையாகவே ஒலிகள் இருப்பது வழமையானது என தெரிவிக்கப்படுகின்றது. எனினும் ஒலிவந்த பகுதிகளை நோக்கி தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

இதனிடையேஇந்தகலம்அதிகஆழத்திற்கு செல்வதற்கு உகந்தது அல்ல என்ற குற்றச்சாட்டு எழுந்திருந்ததுடன், அது தொடர்பில் வழக்கும் பதியப்பட்டிருந்தது. மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், கலம் 1,300 மீற்றர்கள் பயணிப்பதற்கே பாதுகாப்பு சான்றிதழ்களை கொண்டிருந்ததாகவும், இந்த நிறுவனத்தின் முன்னாள் கடல் நடவடிக்கை பிரிவு தலைவர் டேவிட் லொட்றிச் தெரிவித்துள்ளார். அதாவது ரைற்றானிக் மூழ்கியுள்ள 4000 மீற்றர் ஆழத்திற்கு செல்வதற்கு இது உகந்தது அல்ல.

இரண்டு மீற்றர் விட்டமுடைய இந்த கலம் கடலின்ஆழத்தில் அதிகளவான அமுக்கத்தை தாங்கும் சக்தியை கொண்டிருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார் போஸ்மத் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கடல் உயிர்வள ஆய்வாளர் கலாநிதி கிகோலை றொரேடம்.

மலிவான காபண் நார்களால் (Carbon fibre) உருவாக்கப்பட்டுள்ளது இந்த கலம். கார்பன் நார்கள் ரைற்றேனியம் உலோகம் மற்றும் இரும்புகளை விட வலிமையானது என்றபோதும் அது அதிகளவில் பரிசோதிக்கப்படவில்லை.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

## பொருளாதார ... தொடர்ச்சி ...

விலையும் அதிகரித்துள்ளது.

கொழும்பு நகர் பகுதியில் அதிகளவான வியாபார நடவடிக்கைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வீதியோரங்களில் விற்பனையில் ஈடுபாடு காட்டி வருகிறார்கள் இரவு பகல் பாராது நாட்டாமை ஊழியர்களும் கூட வண்டிகளில் சுமந்து பொருட்களை ஏற்றி இறக்குகின்றனர் இவ்வாறு இருந்த போதிலும் சகல விதமான கூலிகளும் போக இது போன்ற வியாபாரிகளின் இலாபமீட்டல் குறைவாகவே உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகமாக சாதாரண மக்கள் சேரிப் புறங்களிலும் அடுக்கு மாடிகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். நாள் கூலி தொழிலாளிகளாகவும் முறைசாரா துறை என்ற நிலையில் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டாலும் சுமார் குடும்ப வாழ்வில் பாடசாலை செல்லும் பிள்ளைகள் உட்பட சுகாதார தேவைகளை பூர்த்தி செய்தல் முதல் பொருளாதார கஷ்டங்களை அனுபவித்தே வருகின்றனர்.

இவ்வாறாக ஒட்டு மொத்தமாக இவர்களின் நிலை அறிந்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள மாற்று வழி வகைகள் ஊடாக வீதி வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிட்டுமா என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

(தானும் தனது கணவரும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கொண்டிருந்த கனவுகளை பூக்கடை நடத்தும் சரஸ்வதி என்னுடன் பகிர்ந்து கொண்டார். அவரின் கணவர் 20 வருடங்களாக அந்த பூக்கடையை நடத்தி வந்த நிலையில் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் திடீரென மரணமடைந்து விட்டார், அதன் பின்னர் கடையைக் கையேற்ற சரஸ்வதி அதனை தற்போது நடத்தி வருகின்றார். அவரின் மூன்று பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்லும் நிலையில், வீட்டு வாடகையாக மாதாந்தம் 20,000 ரூபாயை செலுத்த வேண்டியுள்ளது. அவரின் நிதியியல் சிரமங்கள் அவரின் முன் மலைபோல் குவிந்துள்ளன. அவரின் திடமான மனவுறுதிக்கு மத்தியிலும், நிம்மதியான வாழ்வை அமைக்க வேண்டும் என இந்த சுயதொழில் செய்யும் பெண் கொண்டுள்ள கனவு நனவாவது எட்டாக்கனியாகவே உள்ளது.)

**முற்றும்**

## இந்தியாவின்.. தொடர்ச்சி ...

இந்தியாவின் வேண்டுகோளை எற்று நடப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தி அரசுக்கு எதிராக இடப்படும் பதிவுகளை நீக்குமாறு இந்திய அரசு தமக்கு அழுத்தம் தருவதாக ருவிட்டரின் முன்னாள் பணிப்பாளர் ஜக் டோசி தெரிவித்திருந்தார்.

இதனிடையே ரெஸ்லா கார் நிறுவனத்தின் கிளை ஒன்றை இந்தியாவில் திறப்பது தொடர்பிலும் இருவரும் உரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சா(தி)தீ... தொடர்ச்சி ...

மேலெழுந்த விடுதலை தாகமாகவே இருந்தது.

2009, மே, 18, ல் முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகள் மௌனித்த போதும் 2023, மே,18, வரை 14, வருடங்களாக வெளிப் படையாக சாதி வேறுபாடுகளை எவருமே பகிரங்கமாக கூறவில்லை.

ஒரு உண்மையான நேர்மையான தமிழ்தேசிவாதியாக யார் இருந்தாலும் சாதி மதம் பார்க மாட்டான் தமிழினம் என்ற ஒன்றை சொல் மட்டுமேதமிழ்தேசியவிடுதலையைபெற்றுத்தரும் என்ற எண்ணம் ஒருவருடைய இரத்தத்துடன் ஊறிய ஒன்றாக இருக்கும்போதுதான் அவன் தமிழ்தேசிய அரசியலுக்குப்பொருத்தமானவன் என்பதை அறியலாம்.

வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஷ்வரன் அவரே தாம் கொழும்பில் நெடுங்காலம்வாழ்ந்ததாககுறிப்பிடுகிறார். இப்படி சிங்கள பெரும்மான்மைக்குள் வாழ்ந்தமையால் தமது இரண்டு ஆண் மக்களையும் சிங்கள பெண்களுக்கு மண மக்களாக ஏற்றுக்கொள்ள வைத்தவர்.

இன ரீதியாகவே தமிழ் பெண்களை தமது புதல்வர்களுக்கு வாழ்க்கைத்துணையாக கூட சந்தர்பம் அவருக்கு கிடைக்கவில்லை.

அப்படியாக கொழும்பில் வாழ்ந்த ஒருவரை திடீரென 2013, ல் தமிழ்தேசிய அரசியலில் உள்ளீர்க்கப்பட்டபோது அவர் தமிழ்தேசிய அரசியலுக்கு பொருத்தம் இல்லாதவர் என்பதை 2013, ல் வெளிப்படையாக கூறி எதிர்தவர் மட்டக்களப்பு மாவட்ட பாராளு மன்ற உறுப்பினராக அப்போது இருந்த பா.அரியநேத்திரன் மட்டுமே அப்படி வெளிப்படையாக அவர் 2013, ல் கூறியது உண்மை என்பதை பலர் பின்னாளில் அவரின் செயல்பாடுகளால் அறிந்துள்ளனர் இருந்தும் அவரை வடமாகாண தமிழ்மக்கள் தமிழ்தேசியவாதியாக மட்டுமே இனம்கண்டனர் அதனால்தான் அவரை 2013,ல் வடமாகாண முதலமைச்சராக அழகுபார்தனர்.

போதாக்குறைக்கு 2020, ல் அவரை பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்தனர் அப்படியான ஒருவர் திடிரென 2023, ல் சாதியம் பேசும் ஒருவராக மாறி இருப்பது கண்டிக்க வேண்டியது.

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதிவழுவா நெறி முறை யில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத் தோர் பட்டாங்கில் உள்ளபடி”

என்ற ஔயாரின் பாடலை மீட்டுப் பார்க்கும் விக்கினேஷ்வரன் ஐயா தான் சாதியை பற்றி இழிவாக நினைக்காவிட்டால் ஏன் ஏனைய தமிழ்தேசிய வாதிகளை பற்றியும் அவர்களின் குலம் கோத்திரம் சாதி பற்றிய கருத்துக்களை தமது வலைத்தளங்களில் பதி விட்டிருக்கவேண்டும்.

செய்வதை பிழையாக செய்துவிட்டு அதனை மூடிமறைக்க ஆயிரம் பொய் சொன்னாலும் அதனை அறிவுள்ள சமூகம் எற் காது என்பதே உண்மை.

தமிழ்தேசிய அரசியலுக்கு குலம், கோத்திரம், சாதி என்பன சாபக்கேடு என்பதை தமிழர்கள் புரிந்துகொள்ளாதவரை தமிழர்க்கு விடிவு இல்லை.

**முற்றும்**

## மீண்டும் செல்வ ... தொடர்ச்சி ...

அதன் வடிவமைப்பிலும் குறைகள் உள்ளது. எனினும் பாதுகாப்பு, இயங்குதிறன் போன்ற சில தரக்கட்டுப்பாடுகளை அவை எட்டினால் சான்றிதழ்கள் இல்லாமல் அவற்றை பயன்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள பிரச்சனை என்னவெனில்




ஒக்சிசன் முடிவடைவது தான். கார்பன்டைஒக்சைட்டின் அளவு அதிகரிக்கும் போது மனிதர்கள் தூக்க நிலைக்கு சென்றுவிடுவார்கள். அது மேலும் அதிகரித்தால் மரணம் ஏற்படும் என தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் நியூபவுன்ட்லான்ட் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை கலாநிதி கென் லிடேஸ்.

மின்சாரம் தடைப்பட்டால் ஒக்சிசன் அளவை கட்டுப்படுத்த முடியாது. கலத்தில் கார்பன்டை ஒக்சைட் வெளியேற்றும் பொறிமுறையும் இல்லை. கடலின் அடியில் வெப்பநிலை பூச்சியமாக இருக்கலாம். மின்சாரம் தடைப்பட்டால் வெப்பத்தை உருவாக்குவதும் கடினம். எனவே குளிரினாலும் மரணம் ஏற்பட்டலாம்.

இதனிடையே தற்போது மீட்புப்பணியில் ஈடுபட்டுவரும் கலங்களின் தொழில்நுட்பம் என்ன?


### கனடாவின் விமானம்

கடலுக்கடியிலான ஒலிகளை கண்டறியும் தன்மை கொண்டது. இதில் நீண்ட அலைவரிசை புறஊதா காணொளிகள் உள்ளன.

### தன்னிச்சையாக இயங்கும் வாகனம் (ROV)

இந்த வாகனம் அதிக ஆழத்திற்குள் செல்லக் கூடியது. அதுவே 2004 ஆம் ஆண்டு ரைற்றானி கப்பலை கடலுக்கு அடியில் படம்பிடித்தது

### பிரான்ஸின் ஆளில்லாத கலம் (Victor 6000)




இது 6000 மீற்றர் ஆழத்திற்கு செல்லக்கூடியது. இது சங்கிலிகளையும், அதனை இயக்கும் உபகரணங்களையும் கொண்டுள்ளதால் சிக்குண்ட கப்பல்களை விடுவித்து மேலே கொண்டுவரும் தகமை கொண்டது.

### Odysseus 6k

இந்த ஆளில்லாத கலம் 6000 மீற்றர் ஆழத்திற்கு சென்று 21,000 இறாத்தல் எடை கொண்ட ரிற்றன் போன்ற கலங்களை விடுவித்து மேலே கொண்டுவரும் தன்மை கொண்டது. கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட நிறுவனம் இதனை கொண்டுள்ளது.

பிரான்ஸின் Nautile கலமும் தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இது முன்னர் ரைற்றானிக் உள்ள பகுதிக்கு சென்று வந்தது. 6000 மீற்றர் ஆழம்வரை செல்லும் இந்த கலம் காணொளிகளை கொண்டுள்ளதுடன், தன்னிட்சையாக மீட்புப் பணிகளை மேற்கொள்ளக்கூடியது. இது தொடர்ச்சியாக 8 மணி நேரம் கடலினுள் பயணிக்க கூடியது.

இவைதவிர அமெரிக்கா கடற்படையின் Flyaway Deep Ocean Salvage System (FADOSS) என்னும் தொகுதியும் கொண்டுவரப்பட்டுள்ளது. இது 60,000 இறாத்தல் எடை கொண்ட பொருட்களையும் மீட்க கூடியது. 19,000 அடியில் புதைந்து கிடத்த உலங்குவானுர்தி ஒன்று இதனால் மீட்டகப்பட்டது.

இவை எல்லாம் கலத்தை மீட்கும் தன்மை கொண்டவை ஆனால் அதில் உள்ளவர்களின் உயிர்களை காப்பாற்ற உதவுமா என்றால் அது முடியவில்லை. புறப்பட்ட ஒரு மணி நேரம் 45 நிமிடங்களில் அதிக அமுக்கம் காரணமாக கலம் நொருங்கியதால் அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

ரைற்றானிக் கப்பலின் இடத்தில் இருந்து 480 மீற்றர்கள் தொலைவில் றிற்றனின் 5 பாகங்களை கனேடிய கப்பலில் இருந்து அனுப்பப்பட்ட ஆளில்லாத கலம் கண்டறிந்துள்ளது. கடலின் மேற்பரப்பை விட ஆழத்தில் அமுக்கம் 100 மடங்கு அதிகம் என்பதால் அனைவரும் உடனடியாகவே உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

• • •

## 2009 மே18 க்கு... தொடர்ச்சி ...

அறவே இல்லை என்பதை ஒவ்வோருவரும் தனது மனச்சாட்சியை தொட்டு சொல்லமுடியும்.

போதை ஒழிப்பு தினத்தில் மட்டும் போதைக்கு எதிராக போராட்டம் குரல்களை கொடுப்பதாலும், கவன ஈர்ப்பு பேரணிகளை நடத்துவதாலும் மட்டும் நாட்டில் இருந்து போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க முடியாது ஒவ்வொரு குடும்பத்திலும், சமூகத்திலும், ஊர் பிரதேசம் மாவட்டம் மாகாணம் முழுவதிலும் உள்ள மக்கள் சுயமாக போதைபொருளை தடுக்கும் மன எண்ணம் உள்ளத்தில் இருந்து எழுந்தால் மட்டுமே போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்கமுடியும்.

தற்போது சில இடங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றாக கடல்கரைகளிலும் உணவகங்களிலும் மதுபானம் அருந்தும் மிக மோசமான கலாசாரம் தமிழ் பகுதிகளிலும் இருப்பது வேதனையான வெட்கேடான செயலாகும் இதேபோல் குடும்பத்தில் தகப்பன் பிள்ளைகள் சகோதரர்கள் ஒன்றாக மதுபானம் அருந்தும் மேற்கத்திய கலாசாரமும் புலம்பெயர் தமிழ் உறவுகள் சிலர் மூலமாக வடக்கு கிழக்கு தமிழ் பகுதிகளில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்பதும் வெளியில் சொல்ல வாய் கூசும் நிலை உள்ளது.

போதை பொருள் தடுப்பு எதிராக வெனர் பிடித்து கவன ஈர்ப்பு நடத்தும் சில பிரமுகர்களே இரவினில் பதுபானம் அருந்தி கும்மாளம் போடும் இப்படியானவர்களா போதைப்பொருள் பாவனையை தடுப்பார் என்ற கேள்வி பலர் மத்தியில் உள்ளது.

சிலர் போதை என்பது ஹேராயின், கஞ்சா, அவின்,ஐஷ்மாத்திரை, போன்ற சில பொருட்கள் மட்டும்தான் என எடை போடுகிறார்கள் உண்மையில் மதுபானங்களான சாராயம், வியர், விஷ்கி, புகைத்தலுக்கான வீடி, சுருட்டு, சிக்ரெட் எல்லாமே போதைப்பொருட்கள் என்பதை உணர்ந்து அதில் இருந்து எமது சமூகத்தை நல்வழிப்படுத்த அனைவரும் இன்றைய போதைப்பொருள் தடுப்பு நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

• • •

## எதிர்ப்புக்களை... தொடர்ச்சி ...

இருப்பது ஒரு அரசியல் நாடகம் என கிறீன் பீஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. அவர்கள் சூழலை பாதுகாக்கும் அனைத்துலக விதிகளை மீறியுள்ளனர். விஞ்ஞா னத்தைவிட அவர்களுக்கு அர சியலே முக்கியமானது என அது மேலும் தெரிவித்துள்ளது.

*1986 ஆம் ஆண்டு உக்ரைனின் செரனோபைல் பகுதியில் இடம்பெற்ற அணுமின்னிலைய விபத்திற்கு பின்னர் இடம்பெற்ற மிகப்பெரும் விபத்து இதுவாகும்.*

## டில்லிக்கும்... தொடர்ச்சி ...

இருக்கின்றது என்பது உண்மை.

ஆனால், இதனைக் கொண்டுவருவதை விட, ஜனாதிபதி விரும்பினால் உடனடியாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபைகளின் ஊடாக இந்த நியதிச் சட்டங்களை உருவாக்க முடியும். அதனால், இவ்வாறான யோசனைகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான உபாயங்களாக மட்டுமே இருக்கும். தென்பகுதிகளில் உள்ள மாகாண சபைகளில் பல நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு மாகாண சபையில் ஒரேயொரு நியதிச் சட்டம்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆலோசனைச் சபையைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி விரும்புவதற்கு அதுவும் காரணமாக இருக்கலாம். அதனால், இந்த ஆலோசனைச் சபை என்பது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வதாக இருக்காது. அதனால், அதனை ஆதரிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தோம்!

• • •

## பைடனின் கருத்தா ... தொடர்ச்சி...

ஆனால் 80 வயதான பைட னின் கருத்து அமெரிக்காவின் கருத்தை பிரதிபலிப்பதாக இருக் காது எனவும், பைடன் இவ்வாறான முரன்பட்ட கருத்துக்களை அடிக்கடி தெரிவிப்பதாகவும் சீனாவின் வெளிவிவகார அமைச்சகத்தை தொடர்பு கொண்ட வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

2018 ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல் தடவையாக அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் சீனாவுக்கு சென்ற சில நாட்களில் பைடன் இந்த கருத்தை வெளியிட்டது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பாதிக் கலாம் என அச்சம் எழுந்திருந்தது.

ரஸ்யாவில் ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற் படுத்தப்போவதாக கடந்த வருடம் போலநதில் பைடன் தெரிவித்த கருத்தால் எழுந்த சர்ச்சை களையும் அமெரிக்க அதிகாரிகள் பின்னர் சமாளித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா அரங்கு ... தொடர்ச்சி ...

அதற்காக மட்டும். இரண்டாவது - சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு முகத்தில் கரியைப் புசுவதற்கும், அதன் இனவாத முகத்தை அம்பலப்படுத்துவதற்கு இது உதவலாம். ஆனால், இந்த இரண்டாவது விடயத்தைப் பற்றி இலங்கை ஆட்சியாளர்கள் கவலைப்படுவதில்லை. சர்வதேச அரங்கில் இவ்வாறு இலங்கை அரசுக்கு எதிரான ஒரு அழுத்தம் இருக்கும் போதுதான் சிங்கள வாக்குகளை அரசுகளால் இலகுவாக அறுவடை செய்ய முடியும். அதனால், மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சர்வதேச அழுத்தம் இருப்பது அரசாங்கத்துக்குள் உள்நாட்டு தேர்தல் அரசியலைப் பொறுத்தவரை அரசுக்கு நன்மை பயக்கும்.

இந்தப் பின்னணியில் ஜெனிவா என்பது வருடத்துக்கு மூன்று தடவை வரும். ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்பதை ஒவ்வொரு தடவையும் எம்மால் காணக்கூடியதாக இருக்கும்!

• • •

## எலும்புக்கூடுகள்... தொடர்ச்சி...

இனத்தை சேர்ந்தவர்கள். ஆனால் நாங்கள் இலங்கையின் பல பகுதிகளில் காணப்படும் பாரிய மனிதபுதைகுழிகளில் உள்ள ஆயிரக்கணக்கான எலும்புக்கூடுகளின் மத்தியில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மழைக்காடுகளை ... தொடர்ச்சி ...

விரைவுபடுத்த வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டு வருவதாக சுற்றுச்சூழல் மற்றும் காடுகளுக்குப் பொறுப்பான அமைச்சு எம்மிடம் கருத்துத் தெரிவித்தது.

"பூர்வீகக் குடிமக்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு முக்கிய காரணம் இருக்கிறது" என்று அமைச்சின் மழைக்காட்டுத் திட்டத்தின் துணை இயக்குநரான யூலி பிறெசெற்யோ (*Yuli Prasetyo*) கூறினார். தமது நிலங்களை செயற்றிறன் மிக்க விதத்தில் எவ்வாறு

பாதுகாப்பது, நிர்வகிப்பது என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். "நாங்கள் அனைவரும் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள லாம்."

கடந்த மே மாதத்தில், பன்னாட்டு நிதி வழங்குநர்கள் அடுத்த பத்து ஆண்டுகளில் கிட்டத்தட்ட 20 மில்லியன் டொலர்களை வழங்கும் நுஸன்றறா நிதியத்தை (*Nusantara Fund*) அங்குரார்ப்பணம் செய்த பொழுது பூர்வீகக் குடிகளின் செயற்பாடுகளுக்கு ஒரு சிறப்பான உந்துதல் கிடைத்தது. இந்தோனேசியாவின் பூர்வீகக் குடிகளுக்கும் உள்நாட்டுச் சமூகங்களுக்கும் நேரடியாக கிடைக்கக்கூடிய விதத்தில் முதல் முதலாக ஏற்பாடுசெய்யப்பட்ட நிதியம் இதுவாகும்.

மேற்கு பாப்புவா பிரதேசத்தை மீண்டும் நாம் கவனத்தில் எடுக்கும் போது, பூர்வீகக் குடிமக்களுக்கான வலுவூட்டலைப் பொறுத்தவரையில் ஓர் புதிய யுகம் உதயமாவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த மாவட்டத்தின் முதல் பெண் தலைவியாக யுஸரீனா தெரிவுசெய்யப்பட்ட போது, ஆரம்பத்தில் தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்த சில ஒகொணி இனமக்கள் சிலர் இப்போது அவரை ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர்.

"இந்தப் பணியைச் செய்வதற்குப் போதிய ஆற்றல் என்னிடம் இல்லை என்று ஆண் தலைவர்கள் கூறினார்கள்" என்று பலவண்ண ஆடையைத் தலையில் அணிந்தவராக, நாய்ப்பற்களால் ஆன மாலையில் கழுத்தில் போட்டுக்கொண்டு, தனது தாயாரால் கொடுக்கப்பட்ட கைகளால் நெய்யப்பட்ட சாரத்தை உடுத்துக்கொண்டு அந்த மழைக்காட்டின் மண் பாதையில் நடந்தபடி, யுஸரீனா கூறினார்.

"அவர்கள் கூறிய கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அதற்குப் பதிலளிக்கவும் இல்லை. நான் மிகவும் கடுமையாக உழைத்தேன். "என்னிடம் கேள்வி கேட்பதை இப்போது அவர்கள் நிறுத்திவிட்டார்கள்."

**நன்றி: அல்ஜஸீரா**

## புறக்கணிப்பு... தொடர்ச்சி ...

தொண்டமான், முன்னர் இந்தக் குறைபாடுகள் இருந்திருக்கலாம். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வேலை உள்ளது.ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி கிடைக்கின்றன எனக்கூறி கிராம அதிகாரிகளால் அவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கலாம்.அப்போதும் நாம் தற்காலிக தீர்வுகளை பெற்றுக் கொடுத்தோம்.இம்முறை அதிகாரிகள் நேரில் சென்று தகவல்களை திரட்டினர்.எவருக்கும் பாகுபாடு காட்டப்பட மாட்டாது.உதவிக் கொடுப்பனவை பெறுவதற்கு தகுதியான அனைவருக்கும் அது நிச்சயம் கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளதோடு இது குறித்து நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.எவ்வாறாயினும் தொழிலாளர்கள் பொருளாதார நெருக்கடியால் விழிபிதுங்கி போயுள்ள நிலையில் அரசின் நிவாரணங்களாவது உரிய வாறு அவர்களை சென்றடைய அரசியல் தொழிற் சங்க பேதங்களை மறந்து அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.இதைவிடுத்து தொடர்ச்சியாக மலையக மக்கள் நிவாரண உதவிகளை வழங்காது புறக்கணிக்கப்படுகையில் அது பாதக விளைவுகள் பலவற்றுக்கும் வித்திடும். என்பதை. மறுக்க முடியாது.

• • •

## அமெரிக்காவில்... தொடர்ச்சி...

தனது முடிவை மாற்றியுள்ளது என்பது பூகோள அரசியலில் ஏற்பட்ட மாற்றமாக கருதப்படுகின் றது.

பொருளாதாரத்தில் சீனாவை தங்கியிருக்கும் நிலையை தவிர்ப்பதை மேற்குலக நாடுகள் விரும்புகின்றன. எனவேதான் இந்தியாவை பொருளாதார மற்றும் இராஜதந்திர ரீதியில் வளர்ப்பதற்கு அவை விரும்புகின்றன. அமெரிக்காவின் மைக்ரோன் எனப்படும் மென்கடத்திகளை உற்பத்தி செய்யும் நிறுவனமும் மோடியின் பயணத்தை தொடர்ந்து இந்தியாவில் 800 மில்லியன் டொலர்களை முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் திறைசேரி செயலாளரும், பாதுகாப்பு செயலாளரும் இந்தியா வந்திருந்ததுடன் அமெரிக்கா தனது நவீன உளவு விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்யவும் முன்வந்துள்ளது.